ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஆனி-மீ 13-உ (26—6—1932) | மலர் 9.

## தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி



## மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

## குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி. S. I.

## தாது புஷ்டிக்கு

## "கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
## பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு, இம்பீரியல் பிரஸ், மாயவரம்.




## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For párticulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

## Goshaye office pillss.

## கோஷாயி ஆபீஸ் மாத்திரை

உண்மைகடைப் பிடி. நிர்ணயமே ஜெயம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் தயாரித்து அனுபவித்து கைகண்டது.



அமுர்த மருந்த சடலத்தை காத்து, பகுத்தறிவை அரிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தம் அனுபவிக்க சஞ்சலத்தை அகற்றி, சிவராஜ யோகம் சாதித்து வருவோர்களுக்கும் முடிவு பெற்ற, காரியங்களில் மனதை செலுத்தி, சதாசஞ்சலம் அனுபவித்து வரும் இல்லற வாசிகளுக்கும், (ஆனந்த அருள நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம் போல்,) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும் (நீர், நெருப்பு, காற்று,) காலக்கிரம் ஆகார தவக்கத்தினால், முரணுகி, பித்தமதிகரித்த வெட்டையும் வாய்வும் உரவாகியது முதல் மலபந்தம், மலச்சிக்கல், மலம் தீய்தல், அன்னதுவேசம், அசகி, இடுப்புவலி, மார் நோய் கீல் வாய்வு சூலை தாது நஷ்டம் முதலிய வியாதிகள் ஜெனித்து வருவது யாவருக்கும் அனுபவசித்தி.

மேல்படி உபாதையுள்ளோர்கள் இரவு போஜனத்துக்குப் பின் கோஷாயி ஆபீஸ் மாத்திரை ஒன்றை, ஒரு வெத்திலையில் வைத்து மென்று, ஜலம், சாப்பிட்டால் அதிகாலையில் மலம் தாராளமாய் கழிக்கும் க்ஷவரம் தைலஸ்னன முதல் வழக்கம் போல் யாவும் நடத்திக் கொள்ளலாம் மலபந்த முள்ளோர்கள் துடர்ச்சியாயும் வாரமிரு, மும்முறையாக உபயோகித்து வந்தால், வெட்ட வாய்வு உபாதைகளை, நிவர்த்தித்து, திரேகத்தை திடகாத்திரமுண்டாக்கக் கூடியது. குழந்தைகளுக்கு மலச்சிக்கலின் மேல் காணும் சகல ஜுரங்களுக்கும் நேரம் 1-க்கு ஒரு மாத்திரை வீதம் 3 நாள் காலை, காலையில் துளசி சுரசம் பிள்ளைப்பால் இதுகளிலொன்றில் உரைத்து கொடுக்க ஜுரத்துக் கேற்ற பத்தியம் கார்க்க வெத்திலையில் வைத்து சாப்பிட்டு வந்தால் எவ்வித பத்தியமுமில்லை, சிசுக்கள் முதல் உபயோகித்து குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை சீசா ஒன்று, ஒவ்வொரு இல்லத்திலும் சர்க்கோட் பெட்டியிலும் அவசியம் இருக்க வேண்டியது. கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா ஒன்றுக்கு ரூ. 1—10—0 101 மாத்திரை கொண்ட சீசா ஒன்றுக்கு ரூ. 3—2—0 -வி. பி- பாக்கிங் சார்ஜ் வேறு மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்தது அனுப்பி வைக்கவும் சந்தா நெம்பர் தெருவிப்போர்களுக்கு மருந்துடன் கால்டஜன்கோஷாயி ஜீவ தாது மாத்திரைகள் கொண்ட டப்பி ஒன்று (0—12—0 விலையுள்ளது) மருந்துடன் இனமாய் சேர்த்து அனுப்பி வைப்போம்.

சோல் ஏஜெண்டு, திருச்சி ஜில்லா பெரம்பலூர் (தாலூகா) ஷாப், மளிகை அண்டு யூனனி வைத்தியமும் நடத்தி வரும் சே. கி. மு. அங்கமுத்துப்பிள்ளை அவர்களிடம் கோஷாயி வைத்திய சாலையின் மற்ற விவரங்களும் தெரிந்து கொள்ளலாம்.

உதவி டாக்டர் T. K. V. Chalam.
டாக்டர் B. A. எதிராஜ்,
(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர் திருச்சி.

## ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.




தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

# தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

## திருமதி எஸ். குஞ்சிதம் பி.ஏ., எல்.டி., அவர்களின் தலைமையுரை.

18, 19—6—32 சனி ஞாயிறுகளில் மன்னார்குடியில் நடைபெற்ற தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் தலைமை வகித்த திருமதி எஸ், குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்களின் தலைமைப் பிரசங்கம் வருமாறு:—

தோழர்களே !

அறிவிலும், அநுபவத்திலும் என்னைக் காட்டிலும் சிறந்தவர்கள் பலர் இருந்தும் என்னை இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்குமாறு கட்டளையிட்ட காரணம் என்ன வென்பது தான் எனக்குத் தெரியவில்லை. ஒருக்கால் என்னைப் போன்றவர்களுக்கு ஊக்கங்கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தால் இப்படிச் செய்திருக்கிறீர்களோ வென எண்ணுகிறேன். அதன் பொருட்டு உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, இம்மகாநாட்டைக் கடைசி வரையில் ஒழுங்காக நடத்திக்கொடுப்பதற்கு எனக்கு நீங்களெல்லோரும் துணை புரியுமாறும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### நமது இயக்கம்.

நமது சுயமரியாதை இயக்கமானது தமிழ் நாட்டில் சுமார் 7, 8 வருஷங்களாக வேலை செய்து வருகிறபடியால் இதன் கொள்கைகளைப் பற்றி முழுச் சுயமரியாதைக் காரர்களாகிய உங்களுக்கு எதுவும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை யென்றே கருதுகிறேன். ஆனால் பின் ஏன் இங்கு இவ்வளவு சிரமத்திலும், பொருட் செலவிலும் கூட வேண்டுமெனறால், நமது இயக்கத்தைப் பிரசாரம் செய்யவேண்டிய வழிகளைப் பற்றி யோசிப்பதற்காகத் தான். நமது இயக்கமோ எல்லா வித எதிர்ப்புகளையும் பார்த்து விட்டது. எதிரிப் பத்திரிகைகள் ஒரு மூச்சுத் திட்டிப் பார்த்து விட்டன. "உங்களைக் கொன்று விடுவோம்" என்று நமது தோழர்கள் எல்லோருக்கும் கடிதங்கள் எழுதியும் பார்த்தார்கள். நம்மை யெல்லோரையும், தனிப்பட்ட முறையிலும், சேர்த்தும் தூஷித்து நோட்டீஸ்கள் போட்டுப் பார்த்தார்கள். மகாநாடுகளிலும், பொதுக்கூட்டங்களிலும் கல்லெடுத்துப் போட்டுப் பார்த்தார்கள். சட்டசபையிலிருந்து பார்லி மெண்ட் வரையில் நம்மைப்பற்றி கேள்வி கேட்டுப் பார்த்தார்கள். நம்மில் சிலரை ஜாதியை விட்டு விலக்கிப் பார்த்தார்கள். ஒவ்வொருவர் மீதும் பொய்க் கதைகளைக் கட்டி விட்டுப் பார்த்தார்கள். நம்மில் ஒருவருக்குள் ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளும்படி மித்திர பேதம்செய்து பார்த்தார்கள். வட இந்தியாவிலிருந்து காந்தி, மாளவியா, படேல் மூஞ்சே முதலானவர்களை அழைத்து வந்து நமது இயக்கத்தைத் திட்டச் சொன்னார்கள். இன்னும் என்னென்னமோ வெல்லாம் செய்து பார்த்தார்கள். இப்போது கடைசியாக 144 ஐ நம்மீது ஏவி விடுவதற்கு பல இடங்களிலும் சூழ்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். இவ்வளவு எதிர்ப்புகளின் பலன் என்னவாயிற்று என்றால், இந்தியாவிலேயே பார்ப்பனக் கோட்டையாகிய தஞ்சாவூர் ஜில்லாவில் அதிலும் இந்த ஜில்லாவிலேயே பார்ப்பனக் கோட்டையாகிய இந்த மன்னார் குடியில், நமது மகாநாடு கூடும்படி ஏற்பட்டு விட்டது. இந்த வியாபாரத்தில் யாருக்கு லாபம் யாருக்கு நஷ்டம் என்பதை நீங்களே சொல்லுங்கள். இன்னும் சிலர், நமது தலைவர்களில் முக்கியமான இருவர் வெளிநாடு சென்று விட்டதால் நமது இயக்கம் உடனே அழிந்து போகும் என்று ஜோசியம் கூறினார்கள். சிலர் ஞான சம்பந்தர் பிறந்து நமது இயக்கத்தை அழிப்பதற்காகத் தவங்கிடக்கிறதாகப் பயமுறுத்தினார்கள். இரண்டொருவர் மூன்றே நாளில் நமது இயக்கத்தை அழித்து விடுவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகச் சபதம் கூறினார்கள். வேறு சிலர், "ஞான சம்பந்தனைக் கொலை பாதகன் என்று சொல்லும் ஒரு கூட்டத்தை சும்மா விட்டுக் கொண்டிருக்கிறீர்களே," என்று பாமர மக்களின் ஆவேசத்தை நம்மீது கிளப்பி விட்டுப் பார்த்தார்கள். படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களில் சிலர் ஆஸ்திக சங்கம் ஏற்படுத்தி, அதன்மூலம் கடவுளையும் அழைத்துக் கொண்டு வந்து நம்மோடு சண்டை போட்டு நம்மை அழிப்பதற்காக ஊர் ஊராய்ப் பிரசாரம் செய்தார்கள். கடைசியாக நமது இயக்கத்திலிருந்தே பல சுயநலக்காரணங்களால் நம்மை விட்டுப் பிரிந்த சிலர், மூலைக்கு மூலை, "சுயமரியாதை இயக்கம் இனிமேல் அவசியமில்லை என்றும், எல்லோரும் காங்கிரசில் சேர்ந்து விட வேண்டு" மென்றும் பேசியும், எழுதியும் கலைக்கப் பார்த்தார்கள். இதனுடையபலனெல்லாம் என்னவாயிற்றென்றால், இன்று தமிழ் நன்றாய் படிக்கத்தெரியாத என்னைப் போன்றவர்கள் கூட இது வரையில் 7, 8 இடங்களில் தமிழிலேயே பிரசங்கம் செய்யும்படி ஏற்பட்டு விட்டது. இன்னும், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த நாட்களில் கூட மூலைக்கு மூலை சுயமரியாதைக் கூட்டங்களும் மகாநாடுகளும் ஒன்றின் பின் ஒன்றாய் கூடிக் கொண்டிருக்கின்றன.

இந்த சந்தர்ப்பத்தில் நமது நண்பர்களுக்கு ஒரு விஷயம் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அதாவது நமது இயக்கம் ஆரம்பித்த இந்த 7, 8 வருஷங்களாக நம்மை விட்டுப் பிரிந்தவர்கள் எத்தனையோ பேர். அம்மாதிரியேவந்துசேர்ந்தவர்களும்அநேகர். ஒரு இயக்கம் என்றால் இம்மாதிரி பிரிவதும் சேர்வதும் சர்வசாதாரணமாய் நடந்து கொண்டேயிருக்கும். இரண்டொருவர் வெளி தேசங்கள் போய் விடுவதாலோ, நாலைந்து பேர் இறந்து விடுவதாலோ, இரண்டு மூன்று பேர் இயக்கத்திலிருந்து பிரிந்து போய் விடுவதாலோ ஒரு இயக்கம் அழிந்து விடும் என்றால் அவ்வியக்கம் இருப்பதற்கு சிறிதும் லாயக்கில்லை யென்பதோடு, அது நீண்ட நாள் நிலைத்திருக்கவும் முடியாது. இயக்கம் என்றால் உணர்ச்சி என்று பொருள். உணர்ச்சி எப்போதும் மக்களுக்குள் ஊறி, ரெத்த ஓட்டத்துடன் கலந்து ஓடிக் கொண்டே யிருக்கும். ரெத்த ஓட்டம் நின்றால் தான் உணர்ச்சியும் நிற்கும். அது வரையில் எந்த வழியிலேனும் அவ்வுணர்ச்சி வெளிபட்டுக்கொண்டு தானிருக்கும். ஆகையால் ஒரு இயக்கமானது குறிப்பிட்ட நபர்களின் மேல் தொங்கிக் கொண்டிருப்பதனால் அது வெகுகாலம் நிலைத்திருக்க முடியாது. அவர்கள் இறந்ததும் அதுவும் ஒழிந்து போகும். ஆனால் நமது இயக்கத்திலிருப்பவர்களைப் பிரிக்க வேண்டு மென்பது என் கருத்தல்ல. பின் நான் சொல்வதென்னவென்றால், எந்தப் பெரிய காரணத்தைக் கொண்டாகிலும், எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும், (இயக்கத்தை ஆரம்பித்தவர்களாயிருந்தாலும் சரி) இயக்கத்தை விட்டு விலகுவது என்ற முடிவிக்கு வந்தவர்களை எத்தனை நாளைக்குத் தான் கட்டிப்பிடித்துவைக்கமுடியும்? இயக்கத்தில் கலந்துள்ளவர்களுக்கு பொது நலமான நோக்கம் வேண்டும். சிறிதாவது தியாக புத்தியும், விட்டுக் கொடுக்கும் தன்மையும் இருக்க வேண்டும். ஆகையால் இது மாதிரியான சில்லரைச் சம்பவங்களைப்பற்றி பொது மக்கள் சிறிது கூட கவலைப் படாமல் தங்கள் தங்கள் வேலையை மும்முரமாய் நடத்திக் கொண்டிருக்க வேண்டு மென்பதோடு, பிரிந்தவர்களைச் சேர்த்துக்கொள்வதிலும் ஒரு ஆட்சேபணையும் எந்தக் காலத்திலும் காட்டக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### நாம் செய்துள்ள வேலை.

நமது இயக்கம் ஆரம்பித்தது முதல் இந்த 7, 8 வருஷங்களாக நமது இயக்கப் பத்திரிகைகளும், நமது அன்பர்களும் செய்து வந்திருக்கும் தொண்டைப் பற்றி தமிழ் நாடு நன்கு அறியுமாதலால் அதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். என் அறிவுக் கெட்டிய வரையில், இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட எந்த இயக்கமும், அல்லது மதமும் இவ்வளவு சிறிய காலத்திற்குள், அதாவது 7, 8 வருஷங்களுக்குள், இவ்வளவு குறைவான பணச் செலவில், இவ்வளவு வேகமாகப் பரவியிருப்பதாகத் தெரிய வில்லை. சுருக்கமாகக் கூற வேண்டுமானால், வருஷந்தோறும் சராசரி 2500முதல் 3000 வரையில் சுயமரியாதைத் திருமணங்களும், பல்லாயிரக் கணக்கான சடங்குகளை ஒழித்தவர்களும், சுமார் ஒண்ணரை லட்சத்திற்குக் குறையாமல் தமிழ் நாட்டில் சாதி, மதப் பட்டங்களையும், குறிகளையும் ஒழித்தவர்களும், சுமார் 60, 70 மகாநாடுகளும், ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன வென்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், தமிழ் நாட்டிலுள்ள 15 வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண்களுக்கும் அதில் சரிபாதி பெண்களுக்கும் "சுயமரியாதை இயக்கம்" என்ற பெயராவது கட்டாயம் தெரியும் என்றே உறுதியாய் கூறுவேன்.

### நமது பத்திரிகைகள்.

இனி, நமது பத்திரிகைகளைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இது வரையில் நமது இயக்கத்தை ஆதரித்து தனிப்பட்ட முறையில் நடத்தப்பட்டு வந்த பத்திரிகைகள் அநேகம். இதில் சில செத்துக் கொண்டும், வேறு சில தோன்றிக் கொண்டும் தானிருக்கின்றன. நமது இயக்கத்தை எதிர்க்கும் தமிழ்ப் பத்திரிகைகளில் சிலவற்றிற்கு மக்களிடத்தில் செல்வாக்குக் குறைந்து கொண்டிருப்பதையும் நாம் பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம். ஆனால் நமது இயக்கத்திற்குப் பொதுவான ஒரு தமிழ் பத்திரிக்கையும், ஒரு ஆங்கிலப் பத்திரிக்கையும் ஒரு தெலுங்குப் பத்திரிக்கையுமாவது இல்லாதது பெருங்குறை யென்றே சொல்ல வேண்டும். தெலுங்குப் பத்திரிகை ஆரம்பித்தாலொழிய தெலுங்கு நாட்டில் நமது இயக்கத்தைப் பரப்ப முடியாது. உதாரணமாக நான் ராஜமகேந்திர புரத்தில் இருக்கும் போது நான் விசாரித்துப் பார்த்த அளவில் 100க்கு 2 பேருக்கு மேல் சுயமரியாதை 'இயக்கம் என்றால் என்ன வென்பதே தெரியாமலிருந்ததை நினைக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. இனி ஆங்கிலப் பத்திரிகையின் அவசியத்தைப் பற்றியோ

அடிக்கடி சொல்லப் பட்டிருக்கிறது நமது கொள்கைகளை அப்படியே ஒப்புக் கொள்ளக்கூடிய "லண்டன் அறிவு இயக்க சங்கத்தார்கள்" இந்தியாவிலும் ஒரு கிளை ஸ்தாபனம் ஏற்படுத்தி, பம்பாயில் "பகுத்தறிவு" [Reason] என்ற மாதாந்தரப் பத்திரிகை யொன்றை 4-5 மாதங்களாக நடத்தி வருகிறார்கள். அதே இடத்தில் வேறு சிலர் "Sunday Advocate" என்ற ஆங்கில வாரப் பத்திரிகை யொன்றை இதே கொள்கையில் நடத்திவருகிறார்கள். இவர்களுக்கும் நமக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென்றால், ஒரு ஆங்கிலப் பத்திரிகையாவது இருக்கவேண்டியது மிக்க அவசியமாகும். இவைகளை நன்கு கவனித்து பொறுப்புள்ள சுயமரியாதை மாகாண கமிட்டி மெம்பர்கள் உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்கண்டவைகளிலிருந்து நமது இயக்கம் அதிக வேலை செய்துவிட்டதென்று பெருமைப்பட்டு இருந்துவிடக்கூடாதென்று எச்சரிக்க விரும்புகிறேன். நமது இயக்கமோ மிகப் பரந்த லட்சியங்களைக் கொண்டதாக இருக்கிறது. நாமோ இன்னும் அஸ்திவாரம் கூடப்போடவில்லை. நமக்கு முன்னிருக்கும் வேலையோ அபாரமானதாக இருக்கிறது.

## இவ்வியக்கம் புதிதல்ல.

இனி, நமது இயக்கம் ஏதோ நாட்டை அடியோடு கவிழ்த்து விடுவதற்காகத்தான் வந்திருக்கிறதென்று சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவ்விதம் பிரசாரம் செய்கிறவர்களில் 100-க்கு 60-பேர் ஜாதி உயர்வு, பணத்திமிர், மதக்கொழுப்பு முதலியவைகளைக் கொண்ட சுயநலக்காரர்களாகவும், அயோக்கியர்களாகவும் இருக்கிறார்களே யொழிய உண்மையாகவே தேச நலத்தைக்கோரி கவலைப்படுகிறவர்கள் கிடையவே கிடையாது. இப்பேர்பட்டவர்கள் எந்தச்சாக்கைச் சொல்லிக்கொண்டாவது நமது இயக்கத்தைத் தூற்றிக்கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை மிகக்கடுமையான முறைகளைக் கையாண்டுதான் திருப்பமுடியும். அதற்கு வெகு சீக்கிரம் ஒரு சந்தர்ப்பமும் வந்துவிடும். ஆகையால் அவர்களைப்பற்றி நமக்கு அதிக கவலையில்லை. அவர்கள்போக மற்றவர்களுக்கு நான் சொல்வதென்னவென்றால், நமது இயக்கமானது இந்நாட்டிற்கோ அல்லது உலகத்திற்கோ, எவ்வகையிலும் புதிதல்ல. சரித்திரகாலத்தில் எடுத்துக்கொண்டாலும், புத்தர் காலமுதல் இவ்வியக்கம் பற்பல பெயர்களுடன், பற்பல சமயங்களில் தோன்றிக்கொண்டுதான் இருந்திருக்கிறது. இன்றுகூட பல நாடுகளிலும் பற்பல பெயர்களால் இவ்வியக்கக்கொள்கைகள் பரவிக்கொண்டிருக்கின்றன. Rationalists Association (பகுத்தறிவு சங்கம்) என்றும், Truth Seekers Association (உண்மை நாடுவோர் சங்கம்) என்றும், 4A Society-American Association for the Advancement of Atheism [நாஸ்திக அபிவிருத்தி சங்கம்]என்றும், Socialists [சமதர்ம வாதிகள்] என்றும், Free Thinkers Fraternity [தாராள சிந்தனைக்காரர்கள் சங்கம்] என்றும், Communists [பொது உடைமைக்காரர்கள்] என்றும், இன்னும் இம்மாதிரியான நூற்றுக்கணக்கான பெயர்களுடன் நமது இயக்கக்கொள்கைகள் உலகமெங்கும் பரவிக்கொண்டுதானிருக்கின்றன. ஆனால் நமக்கும், இம்மாதிரி சங்கங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், அவைகள் மிக வேகமாகப்போய்க்கொண்டிருக்கின்றன. நாம் அடிமேல் அடியெடுத்து வைத்துக்கொண்டிருக்கிறோம். உதாரணமாகக் கூறவேண்டுமானால், ரஷியநாஸ்திகர் சங்கத்தில் மாத்திரம் 20 லட்சம் அங்கத்தினர்கள் இருப்பதாக ஜெர்மனி பத்திரிகை யொன்று கூறுகிறது. 8 வயதிலிருந்து 12 வயது வரையிலுள்ள குழந்தைகள் மாத்திரம் 40 ஆயிரம் குழந்தைகளை நாஸ்திகத்தில் சேர்த்திருக்கிறார்களாம். ஜெர்மனியில் மட்டும் சென்ற 25 வருடங்களுக்குள் 21 லட்சம் பேர் கிறிஸ்து மதத்தை விட்டு விலகி நாஸ்திக சங்கத்தில் சேர்ந்திருக் கிறார்களென்று 'ஜெர்மானியா' பத்திரிகைகூறுகிறது France-லும் Italy-யிலும்கூட இச்சங்கங்கள் வெகு மும்முரமாக வேலை செய்து வருவதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

## நம் நாட்டின் கேவலமான நிலை.

ஆனால் நமது நாட்டிலோ, ஒரு சாண் பொம்மைக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து தெப்ப உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஊரில் பாதியை அடைத்து குட்டிச்சுவரை எழுப்பி, அதற்குள் குழவிக்கல்லை நட்டுவைத்து அதன் தலையில் பாலையும், பழத்தையும் கொட்டி, சாக்கடைத் தண்ணீரோடு தண்ணீராய்ப் போகும்படி செய்து, அதில் புழுப் புழுத்து, அதையள்ளி நமது சோணகிரிகள் குடித்துக்கொண்டிருக்கிறார்கள், ஓர் சிறு குழந்தை ஓட்டாஞ் ஜல்லியை உறைத்துவைத்து தேர்கட்டி விளையாடுவதுபோலவே, இந்த வயது சென்ற மூடக் குழந்தைகளும் ஒரு சின்ன பொம்மைக்கு 120—150 அடி உயரத்திலும், 60—70 அடி சுற்றளவிலும் ஒரு தேரும் அதற்கு 6 வடமும், இதை இழுக்க பதினாயிரக்கான ஆள்களும் இவ்வளவுக்கும் வருஷந்தோறும் லக்ஷக்கணக்கான ரூபாய்களும் செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். இது மாத்திரமா? மதுரை மீனாட்சியம்மனுக்கு வருஷா வருஷம் திருக்கல்யாணம் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு பதினாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றது. இது வரையில் அந்த அம்மனுக்கு நடந்திருக்கும் கலியாணங்களைக் கணக்கெடுத்துப் பார்த்தால், குறைந்தது 400-500 தடவையாவது அந்த அம்மனின் புருஷன் செத்துப் போயிருக்க வேண்டும். இல்லாவிடில் வருஷா வருஷம் தாலியறுத்துக் கட்டுவானேன்? இன்னும் திருச்செந்தூர், திருப்பதி, திருநெல்வேலி, ஸ்ரீரங்கம், திருவாரூர், கும்பகோணம், சீர்காழி, சிதம்பரம், திருவையாறு, திருவண்ணாமலை, ராமேஸ்வரம், பழனி முதலிய இடங்களை எடுத்துக்கொண்டால், ஒரு நாளைக்கு மாத்திரம் இந்த ஊர்களில் இந்த கல்லுருவங்களுக்கும் செம்புருவங்களுக்கும், துணி, சாப்பாடு, அபிஷேகம், அர்ச்சனை, வாகனம், மேளம் அலங்காரம், வாணவேடிக்கை முதலிய பெயர்களால் செலவழிக்கப்படும் பணம் சுமார் 3,000 ரூபாய்க்குக்குறையாது. ஒரு நாளைக்கு 3,000 ரூபாயானால், ஒரு வருஷத்திற்கு பத்து லட்சத்து எண்பதினாயிரம் (10,80.00) ரூபாய் ஆகிறது. 12 கோவில்களுக்கு மாத்திரம் வருஷச்செலவு இவ்வளவானால், இந்தியாவிலிருக்கின்ற ஆயிரக்கணக்கான கோவில்களின் வருஷச்செலவு எவ்வளவு ஆகும் என்பதைக் கணக்குப் போட்டுப்பாருங்கள். இன்னும் நித்தியப்படிச்செலவு மாத்திரம் இவ்வளவானால், தேர், தெப்ப உற்சவம், மகாமகம், என்ற விசேஷச் செலவுகளும், இவ்வளவிற்கும் காரணமாக இருக்கின்ற கோபுரம், மதிற்சுவர், மண்டபங்கள் முதலிய கட்டடச் செலவுகளும், இந்த குழவிக்கற்களுக்கு நகைகள் என்ற பெயரால் லட்சக்கணக்கான ரூபாய் செல்வும், இத்தனையும் காப்பாற்றி வருவதற்காக சங்கராச்சாரி, மகந்து, ஜீயர், பண்டார சந்நிதி என்ற பகற்கொள்ளைக்கூட்டத்தார்களுக்கு வைர நகைகளும், பல்லக்குகளும், யானை, குதிரை, ஒட்டகம் முதலிய செலவுகளும் இன்னும் இவர்களுக்கு தாசி, வேசி, அவர்களுக்கு வீடு, நகை முதலிய செலவுகளும் சேர்த்து கணக்குப்போட்டுப் பார்த்தால் இந்த பாழும் 'கடவுள்' கொள்கைக்காக எத்தனை கோடி ரூபாய் பாழாய்ப் போய்க் கொண்டிருக்கிறதென்பதை சற்று நிதானமாய் யோசித்துப்பாருங்கள்.

ஆனால் சிலர் கேட்கலாம்; இந்தப் பணமெல்லாம் வீணாய்ப் போகவில்லை நமது மக்கள் தானே சாப்பிடுகிறார்கள் என்று சொல்லலாம்; உலக ஞானம் தெரியாதவர்கள் தான் இப்படிச் சொல்வார்கள். ஏனெனில் பலன்தராத காரியங்களுக்கு [unproductive purposes) உபயோகப்படுத்தப்படும் செல்வமும், சேமித்துவைக்கப்படும் செல்வமும் [hoarded wealth) பாழாய்ப் போனதாகத்தான் பொருளாதார நூல் வல்லுநர்கள் (Scholars of Economics) சொல்லுகிறார்கள். அதுதான் அநுபவ உண்மையுமாகும். நமது நாட்டில் பொருளாதாரத் துறையில் கரைகண்டவர்கள் என்றுவீண் பொய்ஆர்ப்பாட்டம் செய்யும் எ. ரங்கசாமி அய்யங்காரைப்போன்ற போலித்தேசியவாதிகளுக்கு இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்கள் நாட்டின் நன்மைக்குப் பயன்படாமல் சூராவளிக்காற்றில் போவது கண் தெரிவதில்லை, நம்மைப்போன்றவர்கள் எடுத்துச்சொன்னாலும் காது கேட்பதில்லை. இதைவிட்டு விட்டு மாளவியா போன்ற அறிவு சூன்யர்கள் தங்களை பெரிய பொருளாதார நிபுணர்கள் (Experts in Economics) என்று கருதிக்கொண்டு 'தங்கத்லைத விற்காதீர்கள்' என்று மாத்திரம் கூச்சல் போடுகிறார்கள். நமது சோணகிரிகளும் இதைக்கேட்டுக்கொண்டு கூத்தாடுகிறார்கள். ஆனால் ஒருவிஷயம், இந்தத்தேசிய பார்ப்பனர்களுக்கெல்லாம் இவ்வுண்மை முற்றிலும் தெரியாமலில்லை. இந்தக்கோவில்களும், அவைகளைக்காப்பாற்றும் லம்பாடிக கூட்டங்களும் ஒழிந்துவிட்டால் ரங்கசாமி அய்யங்கார், மாளவியா ஆகியவர்களுடைய ஜாதியைச்சேர்ந்த சோம்பேறி பார்ப்பனக் கூட்டத்திற்கு வயிற்றுப்பிழைப்பு போய்விடும். ஒரு புறம் சர்க்காரிலேயோ பார்ப்பனருக்கு வேலை கொடுப்பதில்லை யென்கிறார்கள்; மற்றொரு புறம் நமது மக்களோ நாளுக்குநாள் ஒவ்வொரு துறையிலும் படித்து முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இவர்களுக்கு மானத்தோடு சம்பாதிப்பதற்கு வேறு வழியும் தெரியாது. உடம்பு நோகாமல் நகத்தில் அழுக்குப்படாமல் என்றைக்கும் சுகமாகவே இருந்துகொண்டு தின்று கொழுத்த ஒரு சோம்பேறிக் கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டிருக்கும் இந்தக் கோவில்களை ஒழிப்பதென்றால் அந்த ஜாதிக்காரர்களுக்கு வயிற்றெரிச்சலாய்த்தானே இருக்கும்! ஒரு சிறிய உதாரணம் கூறவேண்டுமானால் இன்றைக்கு திருவனந்தபுரம் கோவிலை இடித்துத் தரை மட்டமாக்கி விட்டால் அங்கிருக்கின்ற. சுமார் ஒரு லட்சம் பார்ப்பனரை ஏதாவது பள்ளத்தில்போட்டு நிரப்பி மேலே ரோட்டு போடுவதற்குத்தான் உபயோகப்படுவார்களே யொழிய வேறே ஜன சமூகத்திற்கு ஒரு கொச்சுக் காசுக்குக்கூட பிரயோஜனப்பட மாட்டார்கள். ஆனால் இவர்களோடு நமது 'சைவர்கள்' என்ற ஒரு கூட்டமும் சேர்ந்துகொண்டு 'ஐயோ! ஒரு கோவிலை இடிக்கவேண்டுமென்கிறார்களே!' என்று சத்தம் போடுவதைக் கேட்கத்தான் எனக்கு மிக வெட்கமாயிருக்கிறது. கரையான் வைத்த புற்றில் பாம்பு போய்க் குடியிருந்து கொண்டு அதே கரையானையே தின்று ஜீவிப்பதுமாதிரி இப்பார்ப்பனர்களும் நாம் கட்டிய கோவிலிலிருந்துகொண்டு நம்மையே வெளியில்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# புதுவை முதலாவது வாலிபர் மகாநாடு.

## திருமதி இந்திராணிபாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை உபந்யாசம்.

புதுவையில் 19—6—32ல் நடைபெற்ற வாலிபர் மகாநாட்டில் தலைமை வகித்த திருமதி இந்திராணிபாலசுப்பிரமணியம் அவர்கள் செய்த தலைமைப்பிரசங்கம் வருமாறு:—

சகோதரிகளே சகோதரர்களே!

புதுவை வாலிபர் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கக்கேட்டுக்கொண்ட வரவேற்புக்கமிட்டியாருக்கு எனது மனமார்ந்த வணக்கத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன். வெப்பத்தால் காய்ந்து வியர்த்து அலுத்து இருக்கும் எனக்கு ஆயாசம் தீர்க்கும் கடல் காற்று வீசும் அழகிய புதுவையின்கண். சிலநாள்களாவது தங்க வசதி கொடுத்த புதுவை மகாஜனங்களுக்கும் என் வணக்கத்தை நன்றி அறிதலோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

என்னை இந்த வாலிபர் மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்கக்கேட்டுக்கொண்ட போழ்து, நான் உலகத்தில் மாபெரும் இயக்கமாகிய சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவள் என்றும், கருமை வெண்மை என்கிற நிறபேதமில்லாமலும், ஜாதிமத வித்தியாசமில்லாமலும், ஆண் பெண் என்ற வேற்றுமை இல்லாத வாலிபர் மகாநாடாகயிருந்தால் நான் தலைமை வகிப்பேன் என்று கூறினேன். உங்கள் உணர்ச்சியும் அங்ஙனமே என்று அறிந்த அளவில் எண்ணற்ற ஆசையுடன் இன்புற்றேன்.

புதுவை வாலிபர்கள் நேரிய வழியில் சமூக முன்னேற்றத்திற்கும், தேச முன்னேற்றத்திற்கும் உண்டான இன்றியமையாத சாதனங்களைக்கண்டு பிடித்து விட்டார்களென்பது என் அபிப்பிராயம். மனத்தால் கண்ட ஆர்வத்தை முறையே நடவடிக்கையில் செய்து காட்டுவீர்களென்று நம்புகிறேன்.

அன்பர்களே, உலகில் பலபல இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன என்பதை அறிவீர்கள். அவைகளில் சாலச்சிறந்தது வாலிபர் இயக்கம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

### வாலிபம்.

வாலிபம் அல்லது இளமையையார் விரும்பார்கள்? என்ன செய்ய இயலாது என்று கேட்கின்றேன்? கடவுள் நம்பிக்கை உள்ளோருங்கூட கடவுள் இளமை, அன்பு, அழகு என்று தான் சொல்லுகிறார்கள். இளமை நெஞ்சைக்கவர்வது போல வேறேதேனுங் கவர்கிறதா? இளமை இல்லை என்றால் உலகின்கண் இன்பம் என்பது உண்டா? புல் பூடுகளிலும், செடி கொடிகளிலும் பறவை விலங்குகளிலும், மக்களிலும் இளமையரும்பிக் கண்ணையுங் கருத்தையும் கவர்கின்றதை காண்கின்றீர்கள் அல்லவா? இளமையே எல்லாவற்றிக்கும் ஊற்று என்பதை உணர்ந்தீர்களா? ஒருவனது வாழ்வும், தாழ்வும் இளமை ஒழுக்கத்தையே பொருத்தது என்பதை அறிந்தீர்களா? இளமை குற்றமற்றது என்பதை நினைத்தீர்களா? இளமையில் பகைமை பொறாமை உண்டாகாது என்பதும், ஒற்றுமைக்குத் தக்க பருவம் என்பதையும் சிந்தித்தீர்களா? அப்படியானால் இளமை என்ன செய்யாது என்று நினைக்கிறீர்கள்.

### வாலிபர் ஆற்றல்.

உலக சரித்திரத்தை நோக்குங்கள். வாலிபர் முயற்சியாலேயே நாடுகள் சீரடைந்து வருகின்றன என்பது புலனாகும்.

ஐரோப்பா யுத்தத்திற்குப்பின் ஜர்மனியிலுள்ள வாலிபர்கள் முதல் முதலில் வாலிப இயக்கத்தை கண்டார்கள். உலகப்போருக்கு வயதானவர்கள் தான் காரணம் என்று கண்டார்கள். சமாதானம் பரவுதற்காக வாலிபர்கள் உலகமெல்லாம் சுற்றினார்கள். ஆங்காங்கே அமைதிக்கு வேண்டிய போதனைகளை எடுத்து உரைத்தார்கள். இப்படியே பிரான்சு, இட்டாலி, துருக்கி, ருஷியா போன்ற தேசங்களில் வாலிபர்கள் இயக்கங்கண்டார்கள். மாசினி என்னும் பெரியாரும், முசோலனி என்னும் பெரியாரும் உறங்கிக்கொண்டிருந்த இட்டாலி தேசத்தை யாருங்கண்டு பயமுறுமாறு, உன்னத நிலைக்குக்கொண்டு வந்தது யார் உதவியால் என்று கேட்கின்றேன்.

முஸ்தபா கமால்பாட்சா, நோயாளி எனப்பட்ட துருக்கியை வீரத்தன்மை பொலிந்து நிற்கச்செய்தது யார் உதவியால் என்று கேட்கின்றேன்.

லெனின், உள்நாட்டு ச்சரவுகளால் பிளவு பட்டிருந்த ரஷியாவை ஐக்கியப்படுத்திச் சுயமரியாதைக் கொள்கைகளை நிலை நிருத்தியது யார் உதவியால் என்று கேட்கின்றேன்?

இராமசாமிப்பெரியார், சுயமரியாதைத் தத்துவங்களைத் தென்னிந்தியாவில் அழுக்கேறி பாசம் பிடித்திருக்கும் ஜனங்களுக்கு இவ்வளவு சீக்கிரம் பரப்பியது யார் உதவியால் என்று கேட்கின்றேன்?

லாயிட் ஜார்ஜ் மகாயுத்த காலத்தில் இங்கிலாந்தின் சுயமரியாதையைக் காப்பாற்றினது யார் உதவியால் என்று கேட்கின்றேன்.

ருஷியாவில், பொது உடமைக் கட்சிக்காரர் தங்களுடைய கொள்கைகளைப் பரவச் செய்து கொண்டு வருவது யார் உதவியால் என்று கேட்கின்றேன்?

இப்பொழுது உலகசாரண இயக்கத்திற்குத் தலைவரும், போயர் யுத்த காலத்தில் இங்கிலீஷ் ஜனரலாகவும் இருந்த சர்பேடன்பவுல் என்னும் பெரியார், யார் உதவியால் வெற்றி பெற்றார் என்று கேட்கின்றேன்?

நான் கூறிய உதாரணங்களெல்லாம் தற்கால சரித்திரம் என்று உணருங்கள். பழையகால சரித்திரத்தைப் பார்த்தாலும் வாலிபர்களால் தான் எந்த இயக்கமும் தீவிரமாய்ப் பரவச் செய்ய முடியும் என்ற உண்மை தெரிகின்றது.

கிரேக்க தேசத்தின் பெரியாராகிய சாக்ரடீசை வைதீகர்களும், முதலாளிக்கூட்டத்தாரும் கொன்று விட்டார்கள். என்றாலும் அப்பெரியாரின் கொள்கைகளை ஆதரித்தவர்கள் வாலிபர்கள் என்று சொல்லுவேன். அக்காலத்தில் குருட்டு நம்பிக்கையிலும், மூடப் பழக்க வழக்கங்களிலும் ஆழ்ந்திருந்த ஜனங்களுக்குப் புரோகிதர்களின் வஞ்சகச் செயல்களை எடுத்துக் காட்டி அவர்களை விடுதலை செய்த இயேசுகிறிஸ்துவின் கொள்கைகளைப் பரவச்செய்தவர்கள் வாலிபர்கள் என்று சொல்லுவேன்.

விக்கிரக ஆராதனையிலும், பலிகளிலும், கொடுமையான வழக்கங்களிலும் ஆழ்ந்து கிடந்த அரேபிய தேச மக்களுக்குச் சுயமரியாதையை யுண்டாக்கிய மகமது நபி அவர்களின் கொள்கைகளுக்கு ஆதரவு அளித்தது வாலிபர்கள் என்று சொல்லுவேன்.

ஜெர்மனி தேசத்தின் சுயமரியாதை வீரராகிய மார்டின்லூதர் அவர்களின் கொள்கைகளை ஆதரித்தது வாலிபர்கள் என்று நினையுங்கள்.

பழைய சரித்திரத்தினாலும், நிகழ்கால சரித்திரத்தினாலும் வருங்கால உலகைப் படைக்கும் பொருப்பு வாலிபர்களுடையது என்று சொல்வேன்.

வாலிபர்களே!

நான் இதுகாறும் கூறிய உதாரணங்களில் பலநாடுகள் எப்படி வாலிபர் முயற்சினால் மேன்மை அடைந்திருக்கின்றன என்பதை உணர்ந்திருப்பீர்கள்.

### வாலிபர்கட்கு எச்சரிக்கை.

இந்தச் சமயத்தில் வாலிபர்களாகிய உங்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். வாலிபர், இயக்கத்தின் பெயரால் நாட்டுக்கு அழிவு தேடாதீர்கள். வங்காள வாலிபர்களை நோக்குங்கள். வங்காளம் அதன் மூலமாக இந்திய முழுவதுமே சங்கடத்தில் அகப்பட்டு தவிக்கின்றது. வங்காள வாலிபர்கள் தேசியத்தின் பேரால் வெடிகுண்டு, துப்பாக்கி கைக்கொண்டு பேயாய்த் திரிகின்றார்கள். நிரபராதியான உத்தியோகஸ்தர்களைத் தாக்குகின்றார்கள். இந்த மூடச்செயல்களினால் நாட்டுக்குத் தீங்கேயொழிய நலன் ஒன்றுமில்லை இம்மாதிரியான சதிகார கூட்டங்களில் வாலிபர் பங்கெடுக்கக்கூடாது.

### வயதானவர்களின் பிற்போக்கு.

சுயநலம் பிடித்த வயது முதிர்ந்தவர்கள் இம்மாதிரியான தீங்குகளுக்கு வாலிபரை உள்ளாக்கப் பார்ப்பார்கள். நீங்கள் சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

தேசியம், மதம், ஜாதி, என்ற வார்த்தைகளினால் உங்களை வசப்படுத்தி, மாறான வழியில் நடத்தப் பார்ப்பார்கள். எல்லாம் அழுக்கேறி துருப்பிடித்த கிழவர்களின் சூழ்ச்சி என்று நினையுங்கள். சாதாரணமாக வயதானவர்களுக்கு முற்போக்கு என்பது தெரியாது. வழக்கம் பழக்கம் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். உலகபோக்கை அறிந்து காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்தார்போல் நடந்து கொள்ள மாட்டார்கள்.

இந்திய தேசிய காங்கிரஸ், முதல் ஒத்துழையாக் காலத்தில் வாலிபர்களை சர்க்கார் பள்ளிக்கூடங்களிலிருந்து வெளிவந்துவிடும்படிக்கட்டளையிட்டார்கள். அநேக வாலிபர்கள் அப்படியே சர்க்கார் பள்ளிக்கூடங்களை விட்டார்கள். என்ன ஆயிற்று, தேசிய பள்ளிக்கூடங்களை இங்கும் அங்கும் ஸ்தாபித்தார்கள். எவ்வளவு நாள் இந்த தேசிய பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன? ஐயோ பாவம், சர்க்கார் பள்ளிக்கூடங்களை விட்டவர்கள் பின்னால் படிப்பை விட்டு வாணாளை வீணாகச் செய்து சரியான படிப்பில்லாது வேலை அகப்படாது கண்ணீரும், கம்பலையுமாய் இருப்பதை நினைக்கும் போழ்து, வாலிபர்கள் கஷ்டத்தை யார்தான் பொருக்கவல்லார்.

இது தானா பெரியோர்கள் வாலிபருக்குச் செய்யும் கடமை என்று கேட்கின்றேன்? பாசம்பிடித்த, முற்போக்கில்லாத, பகுத்தறிவுக்கு இடங்கொடாத வயதானவர்களினால் ஒரு நாடும் முன்னேறாது என்று சொல்லுவேன்.

உதாரணமாக உலக சண்டைகளுக்கெல்லாம் காரணம் வயதானவர்கள் தான் பின்னால் இருந்து குத்தி விட்டு சண்டை வந்த காலத்தில் வாலிபர்களை முன்னால் பலியாய் தள்ளுவார்கள்.

இன்று ஜினிவாவில் நடக்கும் ஆயுதப் பரிகரண மகாநாட்டில் அமைதி நிலவவில்லை என்றால் அதற்குக் காரணம் அங்கே வாலிப அங்கத்தினர்கள் அதிகமாய் இல்லாததினால் என்று அறிக.

கஷ்ட நஷ்டங்கள் வாலிபர்களுடையது. பொருப்பை உணர்பவர்

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

# கடவுள்களின் சுயமரியாதை மகா நாடு.

சென்னைக்கு 2000 மைல் உயரத்தில்

ஆகாயத்தில் கூடிற்று.

பற்பல ரிஷிகளும், தீர்க்கதரிசிகளும் விஜயம்செய்தனர்.

—:0:—

(M. R. விகடன்)

கடந்த 25—5—32ல் சென்னைக்கு 2000 மைல் உயரத்தில் ஆகாயத்தில் கடவுள்களின் சுயமரியாதை மகாநாடொன்று கூட்டப்பட்டது. மகாநாட்டுப் பந்தல் வெகு அழகாகவும், அலங்காரமாகவும் பற்பல தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சாப்பாடு, தண்ணீர் முதலானவைகளுக்கும் நல்ல வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. காலை 9 மணிக்கு மகாநாடு ஆரம்பித்ததும் எல்லாக்கடவுள்களும், தீர்க்க தரிசிகளும், மதப்பிரதிநிதிகளும், அவரவர்களுடைய மனைவிமார்களும் பந்தலில் வந்தமர்ந்தார்கள். கொஞ்ச நேரம் பந்தலில் அமைதி நிறைந்திருந்தது பிறகு தோழர். ஏசுநாதர் எழுந்து பேசியதாவது?

என்து அன்பின்மிக்க சகோதரர்களே! சகோதரிகளே! நம்மால் படைக்கப்பட்ட மனிதர்கள் அவமரியாதையிலிருந்து சுயமரியாதை அடைய ஒவ்வொரு தேசங்களிலும், நாடுகளிலும், இதைப்போலொத்த மகாநாடுகளைக்கூட்டி, தன் மதிப்புக்கும், சுதந்தரத்திற்கும் உரிய உயரிய தீர்மானங்களை நிறைவேற்றி எல்லாத்துறைகளிலும் முற்போக்கடைய பிரயத்தனப்படும், இந்த இருபதாம் நூற்றூண்டில், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு பற்பல புரட்டுக்களை எழுதி வைத்தும், அவைகளை, ஒன்றும் அறியாத பாமர ஜனங்களுக்குக் காண்பித்து, ஏய்த்துத் தின்று கொழுத்து வரும் புரோகிதரர்களால் நாம் படும் ஆவஸ்தைக்கும், அவமரியாதைக்கும் அளவே இல்லை என்பதை நீங்களும், அறிவீர்கள். அப்பேர்ப்பட்ட ஒரு அவமானத்தை போக்குவதற்காக வேண்டித்தான் இம்மகாநாடும் கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டிற்கு அவைத்தலைமை வகித்து சிறப்பாக நடாத்திவைப்பவர் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவராகவும், சுயமரியாதைத் தன்மையில் நீண்டக்கால அநுபவம் பெற்றவருகவும் இருத்தல் வேண்டும். அத்தகையவர் மகான் தோழர் புத்தர் தான் என்பதையும் உங்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறேன். ஆகையால் தோழர் புத்தரவர்களை இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி, யான் பிரரேபிக்கிறேன்.

(தோழர் மகமத்) இச்சுயமரியாதை மகாநாட்டிற்குத் தகுதியானஒரு தலைவரை தோழர் இயேசு அவர்கள் பிரரேபித்ததை யான் என் முழுமனதுடன் ஆமோதிக்கிறேன்.

(தோழர் பரமசிவன்) ஏறத்தாழ 2500 வருடங்களுக்கு முன்னேமே தன்னுடைய சுயமரியாதைக் கொள்கையை கீழ்நாடுகளிலும், மேல்நாடுகளிலும் பரவச் செய்து ஜன சமூகத்தைச் சீர்திருத்தம் செய்து தற்கால விஞ்ஞான சாஸ்திரிகளாலும் போற்றப்படுபவருமாகிய தோழர் புத்தரை இம்மகாநாட்டிற்குத்தலைவராகதோழர். இயேசு அவர்கள் பிரரேபித்ததை யானும் ஆதரிக்கிறேன்.

பிறகு தோழர். புத்தரவர்கள் கரகோஷத்தினிடையே எழுந்து சபையோர்க்குத் தன்னை தலைமையாக்கினமைக்கு வந்தனமளித்துவிட்டுத்தலைமை வகிக்கும் முகத்தான் முகவுரையாக பேசியதின் சுருக்கமாவது.

எனதன்பார்ந்த கடவுள்களே! தேவர்களே!! மதப் பிரதிநிதிகளே!!! சகோதரி சகோதரர்களே!!!!

இன்று கூடிய கடவுள்களின் சுயமரியாதை மகாநாட்டிற்கு என்னை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டதிற்கு யான் மிக்க நன்றியுள்ளவனுகக் கருதுகின்றேன்.

நான் 2500 வருடங்களுக்குமுன் அநேக எதிர்ப்புகள், இடுக்கண்களிடையில், சுயமரியாதைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எனது தர்மத்தை போதித்தேன். யென்றும், பிட்சுக்களின் மூலமாகவும், எனக்குப் பின் வந்த அசோக சக்கரவர்த்தியை போன்ற அநேக ராஜாக்களின் மூலமாகவும் எனது சமதர்மம் உலகமுழுதும் பரப்பப்பட்டதென்றும், அதனுல் ஜனங்கள் சுயமரியாதை, சகோதரத்துவம், சமத்வம், சுதந்தரத்துடனும் வாழ்ந்து வந்தார்களென்றும், எனக்கு முன் பேசியவர்கள் சொன்னூர்கள். அதை என் முழு மனதுடன் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்குச் சரித்திர ஆதாரமும் உங்களுக்கு இருக்கிறது. ஆனல் அப்பொழுதே மனிதர்கள் என் தர்மத்தைக் கைக்கொண்டதைப்போல் நீங்களும் மேற்கொண்டிருப்பீர்களேயானுல் இப்போது வயிற்றுப்பிழைப்புக்காக புரோகிதர்களாயிருக்கும் அயோக்கியர்களிடத்தில் நீங்கள் மாட்டிக்கொண்டு அவஸ்தையும், அவமரியாதையும் அடைய மாட்டீர்கள். உங்களைப்பற்றியும், உங்கள் மனைவிமார்களைப்பற்றியும் ஆபாச முறையில் புராணங்களும், இதிகாசங்களும் எழுதப்பட்டிருக்காது. (அந்த சமயத்தில் பிர்மா எழுந்து) ஆமாம், சார், நான் என் குமாரத்தியை விபசாரம் செய்ததாகக்கூட எழுதி விட்டார்கள். (சரி உட்காரும் என்ற சப்தம்) கூட்டத்தில் குழப்பம் அடங்குவதற்கு ஐந்து நிமிஷம் பிடித்தது. (பிறகு புத்தர் ஆரம்பித்தார்) ஆகையால் சகோதரர்களே, மனிதர்களுக்கு இருந்த பகுத்தறிவு கூட உங்களுக்கு அந்தக் காலத்தில் யில்லை யென்றே விசனத்துடன் சொல்லுகிறேன். இப்படியே நீங்கள் புராண மரியாதைக்காரர்களுக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டு போவீர்களானுல் இதை விட இன்னும் ஆபாச புழுகு மூட்டைகளை உங்கள் மீது சுமத்தி அவமானப்படுத்திக் கொண்டே வருவார்கள். இவைகளை யெல்லாம் தீர்மானங்களின் மூலமாகக் கண்டித்து இந்த வருஷம் கூடப்போகும் மாகாண சுயமரியாதைமகாநாட்டிறகு அனுப்பி அமுலுக்குக் கொண்டுவரச் செய்யலாம். இப்போது தோழர் இயேசு அவர்கள் அரை மணி நேரம் பேசுவார் என்று நம்புகிறேன்.

(இயேசு நாதர்) எழுந்து பெருமை வாய்ந்த தலைவரவர்களே சகோதரிகளே. சகோதரர்களே, என்னுடைய குறைபாடுகளை எல்லாம் உங்களுக்கு விளக்கமாக சொல்ல வென்றுல், எனக்கு ஆங்கிலத்தில் தவிர தமிழில் அவ்வளவு விளக்கமாக பேச முடியாது. என்ற போதிலும் என்னுல் கூடிய வரையில் பேச பிரயாசைப் படுகிறேன் அதன் குற்றங்களை மன்னிப்பீர்களாக.

என்னுடைய கொள்கையை பின்பற்றி நடக்கக் கூடியவர்கள் ஐரோப்பா கண்டத்தில் தான் அதிகமென்பது உங்களுக்கும் தெரியும். எனது முக்கிய வாசஸ்தலம் ரஷ்யா தேசந்தான், சகோதரர்களே, இப்போது ரஷ்யாவில் என்ன நடக்கிறது பார்த்தீர்களா! என் பெயரை கனவிலும் நினைக்கக் கூடாதென்று அரசாங்கத்தாரே 144 வது சட்டம் போட்டு விட்டார்கள். என் பெயரைச் சொல்லி பாமர ஜனங்களை பயமுறுத் ஏமாற்றிப் பிழைத்து வந்த [illegible] தக் கூட்டத்தாருக்கு வயதிற்குத் தக்கபடி தொழிற்சாலைகளிற் வேலை கொடுத்து விட்டார்கள். குருட்டு நம்பிக்கைகளையும் முட்டாள்தனமாக கையாண்டு வந்த சாங்கியம் சடங்குகளையும் அறவே ஒழித்து விட்டார்கள். மதமென்பது மக்கள் ஒற்றுமைக்கு எதிரிடையா யிருக்கிறபடியால் எந்த விதமான மதமும் இருக்கக் கூடாதென்று சட்ட பூர்வமாக நீக்கி விட்டார்கள். அது மாத்திரமா! துருக்கி தேசத்திலும், ஸ்பெயின் தேசத்திலும் இதைப் போலவே சீர்திருத்தம் செய்து விட்டார்கள். ஜெர்மெனியிலும் பகுத்தறிவு சங்கங்கள் ஆங்காங்கு கிளம்பி, பண்டைக் கால புரோகிதர்கள் எழுதி வைத்த அண்டப் புளுகுகளையும் கேள்விக்குப் பதிலற்ற ஆபாசக்கதைகளையும்விளக்கிக் காட்டி சீர்திருத்தம் செய்து கொண்டிருக்கிறுர்கள் லட்சக்கணக்கில் அவ்விடத்தில் சுயமரியாதைக் காரர்கள் விர்த்தியாகிக் கொண்டு வருகிறுர்கள்.

(உடனே மகா விஷ்ணு எழுந்து) ஆமாம், ஆமாம், நான்கூட "டைம்ஸ் ஆப் இண்டியா" (Times of India) என்ற பத்திரிகையில் வாசித்திருக்கிறேன். லண்டனில் கூட அனேக சீர்திருத்த சங்கத்தார் லட்சக்கணக்கில். Tracts துண்டுப் பிரசுரங்களை வழங்கி நமது தோழரைப் பற்றியும், அவரின் தாய் தந்தையர்களைப் பற்றியும் அனேகக் கேள்விகள் கேட்கிறுர்களாம். ஜனங்களும் ஆராய்ச்சி புத்தியால் கற்பனு நம்பிக்கைகளை நீக்கி பகுத்தறிவு சங்கங்களிலேயே சேர்ந்து வருகிறுர்களாம். நான் ஒரு முறை லண்டனிலுள்ள ஒரு டீ ஹோட்டலில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த போது எனக்கும் ஒரு நோட்டீஸ் கொடுத்தார்கள், அது இதோ இருக்கிறது பாருங்கள் (உடனே உட்காரு, உட்காரு என்று கூட்டத்தில் பேசிய சப்தம்) (புத்தர் எழுந்து) What a fool you are! Dont interrupt என்று ஆங்கிலத்தில் சொன்னுர். அவருக்கு எப்படி ஆங்கிலம் தெரியுமென்று சிலர் சந்தேகிக்கலாம். அவருக்கு அதிகமான வரவேற்பு மேல் நாட்டில் தான். உலகத்திலுள்ள எல்லா விதமான பாஷைகளிலும் பேச வல்லவர், மற்றவர்களைப் போல் ஒரே இடத்திலிருந்து கொண்டு ஒரே பாஷையைக் கற்றுக் கொண்டவரல்ல.

(இயேசு நாதர் மறுபடியும் பிரசங்கிக்கத் தொடங்கினுர்) சகோதரர்களே கொஞ்சம் கலாட்டா செய்யாமல் இருக்கும்படி வணக்கமாய்கேட்டு கொள்ளுகிறேன். இப்போது எனக்கு சுயமரியாதைக்காரர்களின்மீது தான் அதிக அன்பேற்பட்டிருக்கிறது. அவர்களுக்குத்தான்மோக்ஷமும் கொடுப்பேன். ஏனென்றுல்? தன்னைப்போல மற்றவர்களையும் கிரியாம்சத்தில் நேசிக்கிறுர்கள். ஆண் பெண் இருபாலருக்கும் சமத்துவம் கொடுக்கிறுர்கள். சகோதரத்வத்தைக் கையாளுகிறுர்கள். உயர்வு தாழ்வைப் பகிஷ்கரிக்கிறுர்கள். எனக்கு உண்டிப் பணம் கொடுக்கிறேனென்றே, பிரார்த்தனை செலுத்துகிறேனென்றே மெழுகு வர்த்திகள் கொளுத்துகிறேனென்றே சொல்லி ஏமாற்றி ஆசீர்வாதம் கேட்கிறதில்லை. ஒரு நாள் தவராமல் பஞ்சமா பாதகங்களைச் செய்து விட்டு ஒரு நாளைக்கு இருமுறை ஜெபத்தால் மன்னிக்கும்படி என்னை தொந்திரவு செய்கிறதில்லை.

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# இராமராஜ்யத்தில்
# ஐந்து நிமிஷம்!

(தோழர் அ. இரத்தினசபாபதி)

(கருத்தூன்றிக்கவனிக்க)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

அங்கொரு அன்ன சத்திரத்தில் பார்ப்பனர்கள் விலாப்புடைக்க உண்டு விட்டு, ஜீர்ணிக்க மாட்டாமல் பெருங்காய உருண்டையை வாயில் போட்டுக் கொண்டு திண்ணையில் படுத்து மலைப் பாம்புகள் போல் புரண்டு கொண்டிருந்தனர்; அச்சமயம் மூன்று நாள் பட்டினியான ஓர் சகோதரி இடுப்பில் மூன்று மாதக் குழந்தையுடன் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து சத்திரத்தின் எதிரில் நின்றார். அவ்வளவு தான்! உடனே இரண்டு குண்டாந்தடியர்கள் ஓடோடியும் வந்து 'ஏண்டி, நீச ஜாதியாகிய நீ இந்தத் தெருவுக்குள் எட்டிப்பார்க்க என்ன தைரியமடி உனக்கு? இது, சு. ம. பயல்கள் ராஜியமென்று நெனேச்சையோ? மகான் காந்தியின் ராம ராஜியமாக்கும்.' என்று கூறி அப்பரிதாப மிருந்த சகோதரியைச் சற்றும் இரக்க மில்லாமல் புளிய மிளாரினால் ஜாடினார்கள். தேகத்தில் இரத்தப் பிரவாகம் காண அச் சகோதரி 'தடா'லெனக் கீழே விழுந்து மூர்ச்சையானார். அந்தோ! உடனே அப்பாதகர்கள் அம்மாதின் கால்களில் வைக்கோர் புரியைக் கட்டி இழுத்துச் சென்று தெருக் கோடியில் போட்டார்கள். தாயின் இடுப்பிலிருந்து கீழே விழுந்தவேகத்தில் அம்மூன்று மாதக் குழந்தை அக்கணமே உயிர் துறந்தது. ஆ! என்ன கொடுமை! என்ன கொடுமை!!

அவ்விடத்தை விட்டு நகர்ந்து பின்னும் சிறிது தூரஞ் சென்றோம். மற்றோர் வீட்டினுள் நுழைந்தோம். அங்கு தோழர் பொன்னம்பலனாரது வலது கையின் மணிக்கட்டு துணிக்கப்பட்டு விழுந்து கிடந்ததைக் கண்டோம்! ஏன்?—எவனோ ஒரு பார்ப்பான் அவரைச் 'சூத்திரன்' என்றானாம். தன்னைத் தேவடியாள் மகன் என அவன் கூறுவதைச் சகியாத அவ்வீரன், பளீரென அவன் கன்னத்தில் அறைந்து 'சூத்திரன் என்று சொன்னால் ஆத்திரங் கொண்டடி' என்ற சுயமரியாதைக் கொள்கையைச் செயலில் செய்து காட்டினாராம். அக்கேஸ் விசாரணைக்கு வந்து 'ப்ரம்ம குலத்தவனை ஓர் சூத்திரன் அடித்து விட்டால் அவன் கையைத் தரிக்க வேண்டும்' என்ற மனு நீதிப்படி தோழரின் மணிக்கட்டுத் தரிக்கப்பட்டு விட்டது. அடுத்தாற் போலிருந்த மற்றொரு அன்பரின் ப்ரஷ்டத்தில் பலமாகச் சூடிடப்பட்டிருந்தது. ஏனெனில் எங்கோ ஓரிடத்தில் அவர் பிராம்மணனுக்குச் சமமாக ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து விட்டாராம்! அக்குற்றத்திற்காக மனு தர்மப்படி அத்தண்டனை!

அதன் பின்னர் அவ்வீட்டைவிட்டு வெளியே வருகையில் என் புத்தி என்சுவாதீனத்திலில்லை, என்னவோ பொம்மை போல் சகோதரியாரின் பின் சென்றேன். ஈ. வெ. இராமசாமியாரின் வீட்டில் எவனோ ஓர் உச்சிக் குடுமிப்பார்ப்பான் புகுந்து கண்ணில் கண்ட சாமான்களையெல்லாம் வாரிப்போய்க் கொண்டிருந்தான், வீட்டிலுள்ள அம்மையார் ஈ. வெ. ரா. நாகம்மாளவர்கள் 'இதென்ன அநியாயம்?' என்றதற்கு 'சூத்திரர்கள் தங்களுக்கென்று எந்த விதமான சொத்துக்களும் வைத்துக் கொள்ளக்கூடாது; அப்படியே வைத்திருந்தாலும் பிராம்மணன் அவற்றைத் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்; இது மனு நீதி!' என்று அப் பார்ப்பான் பதில் கூறினான்!

அதற்கப்பாலுள்ள வேறோரிடத்திற்குச் சென்றோம். அங்கு ஓர் டாக்டர் பலருக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்தார் பார்த்த பொழுது தோழர்களான லிங்கம், அழகர்சாமி, குருசாமி, சிதம்பரனார், சுப்பிரமணியம், இராகவன் முதலிய சுயமரியாதைப் பிரசாரகர்களின் நாவுகளெல்லாம் அறுக்கப்பட்டிருந்தன! ஏன்? மனுச்சட்டத்தின்படி இவ்வன்பர்கள் வேதத்தையும் பிராம்மணனையும் கண்டித்தது மாபெருங் குற்றமல்லவா? 'ஐயோ அநியாயமே' எனத் தலையில் கையை வைத்துக் கொண்டு அம்மையாருடன் வெளியில் வந்தேன்.

அங்கோரிடத்தில் நீதி விசாரணை நடந்து கொண்டிருந்தது. சற்று நின்று கவனித்தோம். டாக்டர் அம்பேத்காரின் ஓர்பந்துபோலிதேசபக்த வீரரான ஓர் ஐயரின் புத்திரி ருக்குமணியை நேசித்தாராம்; பின்னும் சு......ம...... தேசிகரின் புதல்வன் ......அய்யங்காரின் புத்திரி ராதாவை நேசித்தானாம்! இவ்வழக்கில் தீர்ப்புக்கூறிய நீதிபதி, பிராமணப் பெண்களான அவ்விரு சிறுமிகளும் சூத்திரர்களான அவ்விருவரையும் நேசித்த போதிலுங்கூட, இந்த சூத்திரப் பயல்கள் பிராமணப் பெண்களை விரும்பியது மனு தர்மப்படி மா பெருந் தோஷமாகின்றது. ஆதலால் மனுநீதிப்படி இவ்விரு வாலிபர்களின், குறிகளையும் அறுத்து விட வேண்டும்' எனத் தீர்ப்புக் கூறினார். தட்சணமே அவ்விரு வாலிபர்களுக்கும் அத்தண்டனை நிறைவேற்றி விடப்பட்டது. அதே சமயத்தில் சைவப் பழமாகிய சு......ம...... பிள்ளை கி.........மாச்சாரியாரின் புத்திரனுடன் கோர்ட்டுக்கு வந்தார். அவரது வழக்கென்னவெனில், கி.........மாச்சாரியாரின் புதல்வன் ராகவாச்சாரி, சு......ம......பிள்ளையினது புஷ்பவதியான மகள் கமலாம்பாளைக் கையைப் பிடித்திழுத்துப் பலவந்தப்படுத்தினார்' என்பதாகும். இவ்வழக்கில் நீதிபதி, 'மனுதர்ம நீதிப்படி பிராம்மணனுக்கு மற்ற மூன்று வர்ணத்தாருடைய சொத்துக்களையும் பெண்டு பிள்ளைகளையும் ஆண்டனுபவிக்க உரிமையுண்டாதலின் கி.........மாச்சாரியாரின்புதல்வன் பிள்ளையவாளின் புத்திரியை இழுத்ததில் தவறில்லை; அவரது அபீஷ்டத்திற்கு இணங்காது பிடிவாதம் செய்தது பிள்ளைவாளின் புத்திரியான கமலாம்பாளின் குற்றமாகும்; அக்குற்றத்திற்குத் தகுந்த தண்டனை விதிக்கப்படும்' எனத் தீர்ப்பளித்தார். (என்ன நேர்மையான நியாயம்!) அடுத்த நிமிடத்தில் ஆமவடைப் பண்டாரம் போலீசாரால் மடியில் கைபோட்டிழுத்து வரப்பட்டார்! பின்னால் கத்தியால் குத்தப்பட்டு சொற்ப காயமடைந்திருந்த ஓர் பிராமணனும் கொண்டு வரப்பட்டார். ஆமவடைப்பண்டாரம் இராமச் சந்திரராவின் மகன் கோதண்டராம ராவைக் கத்தியால் குத்தி விட்டார் என்பது வழக்கு. மனு நீதிப்படி பண்டாரத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது! அதே விநாடியில் சேஷாத்திரி ஐயங்கார் மகன் வேங்கட்டரமணய்யங்கார், நெல்லையப்ப பிள்ளை மகன் சதாசிவத்தைக் குத்திக் கொலை செய்து குளத்து மடையில் புகுத்து விட்டான் என வழக்குக் கொணரப்பட்டது. விசாரணையில் எல்லாம் தெளிவாயிற்று. ஐயங்காரின் மீது கொலைக்குற்றம் ருஜுவாயிற்று. நீதிபதி தன்னுடைய தீர்ப்பில் 'மனு தர்மநீதிப்படி, பிராமணன் ஒரு சூத்திரனைக் கொலையே புரிந்து விட்டாலும், அவனது தலைமயிரை மட்டிலும் மொட்டையடித்து விடுவது போதுமான தண்டனையாகும் என இருப்பதால், அதன்படி கொலையாளியான வெங்கடராமணய்யங்காரின் தலைமயிரை மொட்டையடித்து விடும்படி தீர்ப்பளிக்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

'ஆ! இந்தக்கொடுமைகளை எவன் தான் சகிப்பான்? ஐயோ! அநியாயமே' என்றெண்ணிக்கொண்டு சகோதரியாருடன் பின்னும் சென்றேன். அங்கோரிடத்தில், மனிதஆரவாரமற்றதனியிடத்தில், அழகிய சோலையின் மத்தியில் சுவாமி..............அவர்கள் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்தார். சகோதரியாரைக்கேட்டதில், தோழர்...............தேர்ந்த படிப்பாளியாதலால் அவர் கற்றுக் கொண்ட நூல்கள் ஓதியபடி, இல்லறத்தைத்துறந்து துறவறத்தை மேற்கொண்டு, வீடு, வாசல் மனைவி மக்கள், சுற்றத்தார் முதலிய யாவற்றையும் துறந்து அந்த ஒதுக்கிடத்திற்கு வந்து கடவுளைக்காணக்கடுந்தவம்புரிகிறார் என்று அறியலானேன். நான் 'அப்படியா?' என எனக்குள் கேட்டுக்கொண்ட அதே நிமிடம் போலீஸ் சேவகனொருவன் விரைந்துவந்தான். வந்தவன் தவம்செய்து கொண்டிருந்த பெரியாரைத்தட்டியெழுப்பி 'நீ என்ன வர்ணம்?' (என்ன குலம்?) என்று அதட்டிக்கேட்டான். அவர் 'நான் சூத்ரன்' என்றார் உடனே அச்சேவகன் 'சூத்ரன் தவம் செய்யக்கூடாதென்பதும், அவ்விதம் செய்தால் ஊரில் அகால மரணங்களும், பஞ்சமும் ஏற்படுமென மனு தர்மம் கூறுகிறதும், அதன் படி சூத்ரன் தவம்செய்யக்கூடாதென்ற அரசாங்கச்சட்டமிருப்பதும் நீ அறியாமற் போனதென்ன?' என்று கோபாக்கிராந்தனாய்க்கூறிக்கொண்டே தன் கையிலிருந்த கொடுவாளால்அப்பெரியாரது தலையைத்துணித்துக் கீழே வீழ்த்தினான். என்ன அநீதி! என்ன அநீதி!!

இக்காட்சியைக்கண்டவுடன் நான் சகோதரியாரிடம் 'போதும் இக்காட்சிகள்! இனிஎன்னால் தாங்க முடியாது; மயக்கமேலிடுகிறது,' என்றிரங்கிய குரலில் கூறினேன். சகோதரியார்; 'அப்படியானால் சரி; இன்னும் ஒரே இடத்தை மட்டில் பார்த்து விட்டுப் போய்விடுவோம்' என்றார். 'சரி என்று அரை மனதோடு ஒப்புக் கொண்டேன். வேறொரு இடத்தை அடைந்தோம். அது பெரிய கோட்டை! அதனுள் ஆயிரக்கணக்கான வாலிபர்களும் சகோதரிகளும் அடைக்கப்பட்டிருந்தார்கள். உற்றுப்பார்த்தபோது, ஐயோ! தோழர்களான வி. எம். பொன்னையா, பாலையா, அருணாசலம் பெருமாள், சிவானந்தம், சிலன் சுப்பையா முதலானவர்களும், விசாலாட்சி, சகுந்தலா, கிரிஜாதேவி காந்தம் முதலிய சகோதரிகளும் என் கண்களில் காணப்பட்டார்கள்! 'இது என்ன அக்கிரமம்? இவர்களை ஏன் இப்படி அடைத்துவைத்திருக்கிறது?' என்று சகோதரியாரைக் கேட்டேன்.

இவர்களனைவரும் நமதியக்கத்திலீடுபட்டு முன்னின்றுழைத்தவர்கள். இவர்களெல்லோரையும் ஒன்றாய்ச் சேர்த்து கூன் பாண்டியன் காலத்தில் 8000 சமணர்களை ஒரே நாளில் கழுவேற்றியதுபோல் இவர்களையும் இன்னுஞ் சில தினங்களில் கழுவிலேற்றப் போகிறார்கள்' என்று சகோதரியாரிடமிருந்து பதில் வந்தபோது என்மனமிருந்த நிலைமையை வர்ணிக்கத் தாய்பாஷையில் வார்த்தைகள் காணப்படாது வருந்துகிறேன்! மனம் துடிதுடித்தது; உள்ளேபோனமூச்சு வெளியே வருவதற்குள் சில பேர

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# விவாக விளக்கம்.

## காதல் மணத்தின் மாண்பு.

### திரு. இ. ஏ. ரொஹீகர் அபிப்பிராயம்.

லார்ட் பென்ஜேஸ் என்பவர் விவாகமானது சடங்குகளின் மூலம் ஒரு ஆடவனையும், ஒரு பெண்ணையும் பிணைப்பதன்று, இயற்கையாகவே ஒரு பெண்ணிற்கும் ஒரு ஆணிற்கும் காதலேற்பட்டு ஒன்றுபடுவது தான் விவாகமாகும். அதற்குச் சடங்கு ஒன்றும் வேண்டியதில்லை. இந்துக்களின் சம்பிரதாயப்படி ஒரு பெண் ஒரு ஆடவனை மணக்கும்போது, அப்பெண் ஆடவனை வணங்கி தன்னை இந்த ஜன்மத்தில் மணப்பதல்லாமல் மற்றும் ஏழுஜன்மங்களில் தன்னைமணந்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டுமாம். இக்கொள்கை புத்திமான்கள் ஒப்பக்கூடாதது. ஸ்திரீ புருஷ சம்பந்த விஷயமாக ஒரு வித கட்டுத்திட்டம் ஏற்படுத்தவேஇவ்விதியை வகுத்திருக்கிறார்கள் என்பது எனது கொள்கையாகும்.

கிறிஸ்துவர்களுடைய கொள்கை பிரகாரம், குருபைபிலை படித்து விவாகத்தை நடத்துகிறார். குருவினுடைய வாக்கியமும் பைபிலிலுள்ள சில வரிகளும் விவாகததை செய்கிறதில்லை. விவாகத்திற்கும், பைபிலுக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. வரவர அறிவு அபிவிருத்தியடைந்துவருகிறபடியால், விவாகத்திற்கு குருவும் பைபிலும் வேண்டியதில்லையென நம்பப்படுகிறது.

சில மதங்களின் கொள்கைபடி விவாகம் கடவுளினுடைய எத்தனத்தினுலேயே நடைபெற வேண்டுமென்றும், கடவுளே இந்த ஆடவனுக்கு இந்த பெண்ணென்று முடிவு செய்திருப்பதாகக்கூறுகிறது. பண்டைக்கால உலகசரித்திரத்தை ஆராய்ந்தால் விவாகத்திற்கு யாதொரு மத சம்பிரதாயமும் இருந்ததாகத்தெரியவில்லை. விவாகச்சடங்கு கடவுளினுல் ஏற்படுத்தப்பட்ட கட்டளையாகவிருந்தால் உலகின் எல்லாபாகங்களிலும் ஒரே விதமான சடங்கு நடைபெறும். ஆனுல் ஒவ்வொரு மதஸ்தினர் ஒவ்வொரு கொள்கையையும் சடங்கையும் அனுசரிக்கின்றார்கள். இதனுல் விவாகச்சடங்கு கடவுளினுல் ஏற்பட்டதல்லவென்றும் மனிதர்களாலேயே உண்டாக்கப்பட்டதென்றும் நன்ருகத்தெரிகிறது.

முற்காலத்தில் பெண்களைத் தாழ்மையாக நடத்திக்கொண்டுவந்தார்கள் பெண்ணை வீட்டுச்சாமான்களில் ஒரு சாமானுக மதித்துவந்தார்கள். இப்பொழுது கல்வியும் நாகரீகமும் அதிகரித்துவிட்டபடியால் பெண்மக்கள் தங்களுக்கேற்பட்டிருக்கும் தீங்கை உணர்ந்து சமத்துவத்திற்குப்போராடுவது ஆச்சர்யமல்ல. பழைய கொள்கை அடியோடு நசித்து விட்டது. ஆனுல் தற்கால பெண்களை சிலர் குறை கூறுவார்கள்' அவர்களைப்பற்றி குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. அவர்களை விவாகம் செய்து கொடுக்கப்படும் முறையையே குறைகூற வேண்டும்.

ஒரு பெண்ணின் அழகிற்காக காதலிக்கிற ஒரு ஆடவன் அப்பெண்ணுடன் சிறிது காலம் வாழ்ந்த பிறகு மனச்சலிப்பை யடைகின்ருன். நாகரீக முறைப்படி மணம் செய்துக்கொண்ட தம்பதிகளும் மனச்சலிப்படைந்து விவாக ரத்து செய்து கொள்ளுகிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் இயற்கைக்குமாருக நடப்பதே யாகும்.

#### பரிகாரமென்ன.

இதற்குப் பரிகாரமென்னயிருக்கின்றது. ஆடவனும் பெண்ணும்ஒருவருடைய தூண்டுதலோ உதவியோ யில்லாமல், தாங்களாகவே பழகி ஒருவரை யொருவர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். புத்திசாலிகளென நினைத்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களாவது, சமூக கட்டுபாடாவது அவர்களுக்கு இடஞ்சல் செய்யக் கூடாது. அவ்விருவர்களுக்கும் எப்பொழுது சஞ்சலமுண்டாகிவிடுகிறதோ அப்பொழுது அவர்கள் பிரிந்து விடலாம். இப்படி இடங்கொடுப்பதில் ஒருவரை யொருவர் நன்குணர்ந்து கொள்ள சந்தற்பமேற்படுகின்றது.

இம்முறை தற்காலத்தில் காதல் மணமெனக் கருதப்படும் முறைக்கும் மாருக யிருக்கலாம். அப்படியாயின் காதலென்பதென்ன என ஆராய்வோம். பிரபலர் ஏ. ஆர் வாடியா என்பவர் தன்னுடைய புத்தகத்தில் கூறியுள்ளதாவது:—

"காதலென்பது இயற்கையாக உண்டாக்க கூடிய ஒருவித உணர்ச்சி.ஒருவர் மேலொருவருக்கு உண்டாகும் உள் அன்பே காதலாகும். ஒரு ஆன்மாவுக்கும் மற்றொரு ஆன்மாவுக்கும் ஏற்பட்ட என்றும் முடிவடையாத சம்பந்தமே காதலாகும்."

திரு. ஸ்விபர்னே கூறியுள்ளதாவது:—"காதலென்பது, இரண்டு இருதயங்களை சரிபாதியாக அறுத்து ஒரு பாதிக்கொரு பாதியாக மாற்றி வைத்துப் பிணைத்தைப் போன்றதாகும்."

மிதவாதிகள், காதல் என்பது இயற்கை உணர்ச்சியென்றும், அது சட்டத்திற்குட் பட்டதல்லவென்றும் முன்பு தெரிந்துகொள்ளவேண்டும்.

காதலுக்குக் கண்ணில்லை யெனக் கூறப்படுகிறது. இக்கொள்கையினின்றும் பல கஷ்டங்களுண்டாகின்றன, உலகில் நாம் நினைப்பதைப் போல் நடக்க நமக்கு சக்தியில்லை. காதலுக்குக் கண்ணில்லையென்றும் கொள்கையை சிறிது ஆராய்வோம். ஒரு யௌவனப்பெண் ஒரு குற்றவாளிமீதோ அல்லது ஒரு நோயாளி மீதோ காதல்கொள்கிருள், இக்காதலின் நிலைமை என்ன? ஒரு ஏழை வாலிபன் ஒரு சீமாட்டியின் மீது காதல்கொள்கிருன். இவனுடைய காதலின் பலன் என்ன? முன்னமேயே விவாகம் செய்துகொண்டவர் மீது காதல்கொண்டு என்ன பயன்? கண்டவர்மீது காதல்கொள்வது ஆகாத காரியமாகும். கண்ட உடன் காதலிப்பது உண்மைக் காதலாகாது. அது ஒருவித காம உணர்ச்சியேயாகும்.

விவாகமானது காதலினுல் நடப்பதாயின் அதுவே இயற்கையின் கொள்கையாகும். அதுவே சந்தோஷமான நாட்களுக்குமுதற்படியாகும். காதலினுலேயே விவாகம் நடப்பதாயிருப்பின் அதற்கு ஒருவருடைய உதவியும் வேண்டியதில்லை. எவ்வித சட்டமும் வேண்டியதில்லை எவ்வித சடங்குகளும் வேண்டியதில்லை. சில மதங்களில் காதலினுல் விவாகம் நடப்பதில்லை யாதலால்உண்மையான ஒற்றுமை ஏற்படுவது அசாத்யமாகி விடுகிறது. சடங்குகளினுலும், சட்டங்களினுலும் அவர்களை ஒற்றுமை படுத்திவைக்கிறார்கள். சட்டத்திற்கு பயந்தே அவர்கள் ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள். உண்மையான விவாகத்திற்கு மதமும் சட்டமும்,முன்னிற்காது.

விவாக ரத்து கொள்ள தம்பதிகளுக்கு அதிகாரம் கொடுப்போம். புருஷனுக்குள்ளது போலவே மனைவிக்கும் எல்லாவிதத்திலும் சுதந்திரம் கொடுப்போம். தற்கால நாகரீகத்திற் கேற்றபடி காதலின் மீது விவாஹம் செய்துக்கொள்ளும்படி விட்டுவிடுவோம்.

ஒரு வாலிபன் தெருவில் போகும் எல்லா அழகிய பெண்கள்மீதும் இச்சை கொள்கிருன். பெண்களும், தையற்காரனின் சாமர்த்தியத்தினுல் அலங்கரிக்கப்பட்ட வலிபர் மீது காதல் கொள்ளுகிருள். அவ்வாலிபரின் இனிய வார்த்தையில்நம்பிவிடுகிருர்கள். இருதரத்தார்க்குள் கடிதப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன, இவர்களுடைய காதலின் தன்மை யென்ன? இது உண்மைக்காதலல்ல. இது அழகுக்காக காதலேயொழிய மனமொத்தக் காதலல்ல, அவ்வாலிபன்தான் காதலித்துள்ள பெண்ணைவிட அழகில் சிறந்த மற்றொரு பெண்ணை சந்தித்தால் பழய காதலியை மறந்து இப்பெண்ணிடம் காதல் கொள்ளுகிருன். பெண்களும் அப்படியே. (திராவிடன்)

---

## ஓரியண்டல் லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி.

### திருச்சிளுப்பள்ளி கிளை ஆபீஸ்.

மேல்நாட்டு முறையாகிய ஜீவிய இன்ஷூரன்ஸ் இயக்கத்தை [Life Insurance] இந்தியாவில் எல்லா ஜனங்களுக்கும் அதாவது ஏழை, பணக்காரன், ஹிந்து, மகம்மதியர், கிறிஸ்துவர், பார்ஸி, பிராமணன், பிராமணர் அல்லாதார் என ஜாதி மதம் முதலிய வித்தியாசம் சிறிதுமின்றி இந்தியர்களாலேயே இந்திய மூலதனத்தைக்கொண்டு பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற "ஓரியண்டல்" இன்ஷூரன்ஸ் கம்பெனி இதுகாறும் 12கோடி [12 Crores] நிகரமதிப்புள்ள பாலிஸி தொகைக்குப் பொறுப்பெற்றுக்கொண்டு கம்பெனியை சிறப்பாகவும், செழிப்பாகவும், கௌரவமாகவும், சிக்கனமாகவும் நடத்திவருவதிலிருந்து எந்த இந்தியனும் பெருமை அடையாமல் இரார்.

கம்பெனியால் ஏற்படக்கூடிய சகல சௌகர்யங்களை எல்லோரும் அடைதற்பொருட்டு பம்பாய் நகரிலுள்ள தலைமை ஆபீஸ் நீங்கலாக நம் தேசத்திலுள்ள ஏறக்குறைய எல்லா முக்கியபட்டணங்களிலும் வெளிநாடுகளில் குறிப்பாக சில இடங்களிலும் கிளை ஆபீஸ்கள ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட நோக்கங்களுடனேயே தென் ஜில்லாக்களின் வாசிகளின் சௌகர்யத்தின் பொருட்டு, 1926 வருஷம் ஒரு சிறிய இன்ஸ்பெக்டர் ஆபீசை ஸ்தாபித்து சுமார் 4 வருடங்களுக்குள் திரு. என். எம். கிருஷ்ணசாமி அவர்களின் உழைப்பாலும், பெரு முயற்சியாலும், சென்ற 1930 வருடம் ஒரு கிளை ஆபீஸ் ஸ்தாபிக்கப்பட்டு அன்னுரையே காரியதரிசியாய்க்கொண்டு நடைபெற்று வருகின்றது. கம்பெனியின் விஷயமான சட்ட திட்டங்களை அறிய விரும்புகின்றவர்களும், பாலிசிதாரர்களாகச் சேர விரும்புகின்றவர்களும், மற்றும் பிரதிநிதிகளாக சேவை செய்ய விருப்பமுள்ளவர்களும், திருச்சிளுப்பள்ளி கண்டோன்மெண்டு 3 மாக்டனுல்ட் சாலை, என்ற விலாசத்திற்கு பிராஞ்சு காரியதரிசிக்கு எழுதினுல் சகல விவரங்களும் தாமதமின்றி கிடைக்கும்.

---

பாலர்கள் பசியால் வருந்த பாலாபிஷேகஞ் செய்வது தான் அறிவுடைமையா!

# மதமென்பதென்ன?

(சென்ற வாரத்தொடர்ச்சி)

அமெரிக்க ஆசிரியர், இங்கர்சால்

பாஸ்டன் நகரத்தில் 1899ம் வருஷத்தில் அமெரிக்க மதச்சுதந்திர சங்கத்தில் செய்த சொற்பொழிவு,

**மனிதனுக்குத் தெய்வ லோகத்திலிருந்து கிடைத்த உதவி என்ன?**

நாம் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றித் துணிவு செய்யு முன் அதற்கு அடிப்படையாக உண்மைகளிருக்கின்றனவா என்று தெறிதல் வேண்டும். கட்டிடத்திற்கு ஆதாரம் வேண்டாமா? நமது நிதானங்களைக் கொண்டும், பிரமைகளைக் கொண்டும், அனுமானங்களைக் கொண்டும் ஒரு கொள்கையை சித்தாந்தப்படுத்த முடியுமா? கட்டிடம் கட்டுவதாயின் அடியிலிருந்தல்லவா கட்ட வேண்டும்.

விசாரணையின் பேரில் எனக்கு ஒரு துணிவேற் பட்டிருக்கிறது. அதற்கு நாலு விஷயங்கள் அடிப்படை முதலாவதாக (Matter) பொருள், அல்லது பதார்த்தம் என்பது அழியாத வஸ்து இரண்டாவதாக (Force) இதுவும் அழியாதது மூன்றாவதாக பொருளும் சக்தியும் ஒன்றிற் கொன்று பிரிக்க முடியாதன. சக்தியற்ற பொருளும். பொருளற்ற சக்தியும் கிடையாது. நாலாவதாக அழியாத தன்மையுடையனவற்றை ஒருவரால் ஆக்கப்பட்டனவாகக் கூறுதல் பொருந்தா வழக்காம், அழிக்க முடியாததை ஆக்கவு முடியாது.

இம்மூலக் கருத்துக்கள் உண்மையானால் பொருளும், சக்தியும் ஆதி, அநாதி காலம் தொடுத்து கடைசி வரையிருக்கு மென்பதும் அவற்றைக் கூட்டவோ குறைக்கவோ முடியாதென்பதும் அவசியமாகக் நமக்குக் கிடைக்கின்றது. இதினின்று ஒன்றும் உண்டாக்கப் படவில்லை. ஒன்றையும் உண்டாக்கவும் முடியாது. ஆக்கியோன் ஒருவனுமில்லை. இருக்கவுமுடியாது. என்பன விளங்கும். இவ்வடிப்படைக் கொள்கைகள் உண்மையானால் இயற்கைக்கு ஒரு எஜமானும் கிடையாது. பிறப் பிறப்பற்றதும் என்றும் பிரிக்கொணததுமாக, பொருள் சக்தி என்பவை இருக்குமாகில் ஒரு கடவுளு மிருக்க முடியாதென்பதும் ஒரு கடவுளும் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து ஆளவில்லை யென்பதும், பிரார்த்தனைகளுக்கு வரங் கொடுக்கும் கடவுள் கிடையாதென்பதும். ஒடுக்கப்பட்டவர்க்கு உதவும் ஒரு தெய்வமில்லை யென்பதும், மாசற்றார் மனக் குறைகளுக்கும் வருத்தங்களுக்கு மிரங்கும் ஒரு கடவுளில்லை யென்பதும், அடிபட்டுச் சாகும் அடிமைகள் விடுதலையையும், குழந்தையைப் பறிகொடுத்த தாயையும் சித்திரை வதைபடுவார் துயரை தீர்ப்பதையையும், தீச்சுடரில் எரிக்கப்படும் வைராக்கிய வீரனது விடுதலையையும் கவனிக்கக் கூடிய ஒரு கடவுள் இல்லை யென்பதும் தானாகவே விளங்கும். அதாவது மனிதனுக்குத் தெய்வ சகாயமொன்றுமில்லை. பெரும் பெரும் வேள்விகளும், யாகங்களும், தியாகங்களும் விழலுக்கிறைத்த நீரேயாகும். பிரார்த்தனைக ளெல்லாம் கேட்பாரற்ற பாலைவனக் காற்றினிடையே செத்தொழிந்தன. நான் எல்லாம் தெரிந்ததாகப் பாவனை பேசவில்லை. எனக்குத் தெரிந்ததையே பேசுகிறேன். பொருளும் சக்தியும் என்றுமழியாது நிலவுவதானால் நடக்கக் கூடியன வெல்லாம் நடந்தன இன்னும் நடக்கின்றன பின்னாலும் நடந்தே தீரும் என்பன எளிதில் உணரலாம். இப்பிரபஞ்சத்தில் தலைவிதி யென்ற வீண் சாபலிய மொன்றும் கிடையாது. ஒவ்வொரு காரியத்திற்கும், நிகழ்ச்சிக்கும் காரணமுண்டு. நிகழாதன நிகழ்ந்திருக்க முடியாது. நிகழ்காலம் சென்ற காலத்தின் கர்ம விளைவாயும் வருங்காலத்தின் காரண பூதமாகவு மிருக்கிறது. இத்தகைய முடிவற்ற நெடிய காலச்சக்கர மென்னும் சங்கிலித் தொடர்ச்சியில் காணமற்போன, அல்லது ஒடிந்து போன ஒரு 'வளையமாவது' கிடையாது. ஒவ்வொரு வெள்ளியினுடைய உருவமும் அசைவும், ஒவ்வொரு உலகத்தின் சீதோஷ்ணமும் அசைவும் ஒவ்வொரு உலகத்தின் சீதோஷ்ணமும் கந்தமூலாதிகள் முதற்கொண்டு சகலவிதமான உயிர்களின் தோற்றமும் உருவமும், எல்லாப் பிரவிக்குணங்களும் புத்தியும், மனச்சாட்சி உண்டெனக் கூறுவதும் மறுப்பதுவும், சகலதூயகுணங்களும், தீயகுணங்களும் எல்லாவிதமான கனவுகளும், நினைவுகளும் நம்பிக்கை பயங்களும் காரணங்கொண்டு அவசியமாக ஏற்பட்டவையேயாகும் இப்பிரபஞ்சத்தில் ஏற்பட்டுள்ள எண்ண முடியாத பொருள்களிலேனும் அவற்றின் சமபந்தங்களிலேனும் எதுவும் வேறு விதமாக இருந்திருக்க முடியாது.

பெரும் சக்தியும் பிறப்பற்று என்றும்நிலைத்திருப்பனவானால் மனிதன் ஒரு தனித்த விசேஷமான சிருஷ்டிப்பொருளில்லை யென்றும் அவனை ஒரு கூறிய அறிவுபடைத்த கடவுள் சிருஷ்டிக்கவில்லை யென்றும் நாம் சொல்லலாம். கடவுள் களிமண்ணைக்கலந்து ஆண் பெண் உருவாக்கி உயிர் சுவாசத்தை அதினுள் ஊதிவிடவில்லை என்று நமக்கு இப்பொழுது தெரியும் நமது முற்பிதாக்கள் வேறுஉலகத்தவரல்லவென்று இப்பொழுது அறிவோம். அவர்கள் இவ்வுலகிலேயே தோன்றிவளர்ந்தவரெனத்தெரிகிறோம். நமக்கு ஏதாவது தெரியுமானால் இந்தப் பிரபஞ்சம் இயற்கையானதென்றும் அதிலுள்ள ஆண்களும் பெண்களும் இயற்கையாகவே பிறந்திருக்கிறார்களென்றும் தெரியும் நமது மூதாதைகளைத்தெரியும், அவர்களது சந்ததிவரலாறுகளையுமறிவோம், இவ்வுல்கவளர்ச்சியில் [Evolution] ஆதிமுதற்தொட்டு மனிதன் வரையுண்டான சங்கிலியின் தொடுப்புகள் பூராவாகவும் நமக்குகிடைத்திருக்கின்றது. கடவுள் ஆவேசத்தினால் எழுதப்பட்ட வேத புத்தகங்கள் மூலம் நமக்கு இவ்விஷயங்கள் கிடைக்கவில்லை உலகத்தில் கிடைக்கும் உண்மைகளைக்கண்டும், உயிர்களின் உருவங்களைக்கொண்டுமே இவ்விஷயங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. மிகச்சாதாரணமான பிராணிகளிலிருந்து இன்னதெனக்குறிக்க முடியாத ஒரு தேவையிலிருந்து குருட்டுத்தனமான உணர்ச்சியிலிருந்து இவ்விதமாகப் பெருகி வளர்ந்துகொண்டே வந்த உருவங்களிலும் வகைகளிலுமிருந்தே கடைசியாக மனிதன் தோன்றுகிறான். வாழ்க்கையென்னும் தேர் ஓடிய தெருக்களெல்லாம் நமக்குத்தெரியும், முன்னேறுமாறு எடுத்துவைத்த, காலடிகள் நமக்குத்தெரியும், அவைகளைத் தேடி எடுத்துவிட்டோம், இதற்கு நாம் எர்னஸ்ட்டு ஹெயிக்கல் என்ற சிறந்த உயிர் சாஸ்திரிக்குக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இப்பொழுது நாம் இப்பிரபஞ்சத்தின் இயற்கையை நம்பி அதில் ஒரு விளக்கமுடியாத அற்புத தெய்வீகத் தன்மை இருப்பதை மறுக்கிறோம்.

## சீர்திருத்தம்.

உலகத்தைச் சீர்திருத்தும்படியாக ஆயிரக்கணக்கான வருஷங்களாக மக்கள் முயன்றுவருகிறார்கள் மக்கள் தெய்வங்களையும் தேவதைகளையும், பிசாசுகளையும், பூதங்களையும் மோக்ஷங்களையும் நரகங்களையும் உண்டு பண்ணினார்கள். வேதசாஸ்திரங்களை எழுதினார்கள். அற்புதங்களைச் செய்தார்கள். தேவாலயங்களையும் காலக்கிரகங்களையும் நிறுவினார்கள், அரசர்களுக்கும் அரசிகளுக்கும் முடிசூட்டினார்கள், மகுடங்களைப்பிடுங்கினார்கள், சிறைகளிலடைக்கவும் சித்திரவதைசெய்யவும், தோலையுரிக்கவும், உயிருடனெரிக்கவும் தலைப்பட்டார்கள், பிரார்த்தனைவளும் பிரசங்கங்களும் செய்தார்கள். பலவிதமாக வாக்களிக்கும் பயமுறுத்தியும் பார்த்தார்கள், ஏமாற்றத்தாலும் இன்சொல்லாலும் வெல்லநினைத்தார்கள் உபந்யாசமும் போதனையும் செய்தார்கள், இம்மட்டோ இன்னும் எத்தனை எத்தனை விதமாக மக்கள் உண்மையானவர்களாக்க, ஒழுங்கானவர்களாக்க தொழில் தேர்ச்சியுடையவர்களாக்க, ஒழுக்கமுடையவர்களாக்க முயன்றார்கள். வைத்தியசாலைகளையும், கலாசாலைகளையும் பெருக்கி கட்டினார்கள், மக்களை மேன்மேலும் சுகமுடையவர்களாக்கவும், நல்லவர்களாக்கவும் செய்வதற்கு தாங்களால் ஆனதை யெல்லாம் செய்தார்கள். என்றாலும் அவர்கள் முயற்சிகள் பலன் கொடுக்கவில்லை விழலுக்கிறைத்த நீரேயாயின என்? இதற்கு நான் காட்டுகின்ற காரணமென்ன?

அறியாமையும், ஏழ்மையும் தீமையும் உலகத்தில் சூழ்ந்திருக்கின்றன. சாக்கடைகள் குழந்தைகள் வளரிமிடமாக இருக்கின்றன, தங்களுக்கே ஆதரவற்று சாப்பாட்டிற்கில்லாத ஜனங்கள் வீடுகளிலும் குடிசைகளிலும் வெளி இடங்களிலும் குழந்தைகளைப்பெற்று நிரப்புகின்றார்கள். அவர்கள் ஈசன் அருளையும் அதிர்ஷ்டவசத்தையும், தர்ம சிந்தனையையும் நம்புகின்றார்கள், அவர்கள் செயல்களின் பலாபலன்களையும் தங்களது பொறுப்பையும் உணரத்தக்க புத்தியில்லாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் பிள்ளைகளை விரும்பவில்லை. என்? பிள்ளை அவர்களுக்கும் அந்த பிள்ளைக்குமே ஒரு பெருத்த சனியனாக இருக்கிறது. அது ஒரு பெருத்த பாரமாகையால் அதை விரும்பவில்லை. இத்தகைய தேடுவாரற்ற குழந்தைகள், சிறைகளையும்வைத்திய சாலைகளையும் நிரப்புவதுடன் தூக்குக்கும் தங்கள் கழுத்தைக் கொடுக்கின்றன. ஒரு சில அசம்பாவிதமாக அதிர்ஷ்டத்தினாலோ அன்றி பிறர் தயையாலோ காப்பாற்றப்படுகின்றன. அவைகள் தீய குணங்களையும் கொடுமையையும் கைக்கொள்ளுகின்றன, அவைகள் பொய் பிறட்டுக்களாலும் கொள்ளைகளினாலும் உயிர்வாழ்கின்றன. தங்கள் தீய குணங்களை வார்சுகளுக்கும் அளிக்கின்றன.

இத்தகைய தீமை வெள்ளப்பெருக்கெடுத்து வருங்கால் அதற்கெதிரான சீர்திருத்தத்துறைகள் எம்மட்டு? தாட்சண்யமும் கூட தன்னையறியாது கொலை களவு குற்றங்களை அதிகரிக்கும் ஒரு கருவியாய் விடுகிறது. தவறுதல் பிழைத்தல் இயற்கைக்கு ஓர் அறிகுறி போன்று தோன்றுகிறது என்? இயற்கைக்கு புத்தியேனும் முன் கூட்டி அடைந்த நோக்கமேனும் இல்லாமையே ஆகும். இயற்கை யாதொரு விதமான நோக்கமில்லாமல் படைக்கவும் கருத்தில்லாமல் படைத்தவற்றைக் காக்கவும் எண்ணமின்றி இவற்றை அழிக்கவும் செய்கின்றது. மனிதனுக்கு சிறிது அறிவிருக்கிறது. அவன் அதை உப

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# குடி அரசு.

ஈரோடு 1932 ஜூன்மீ 26-உ

## மன்னார்குடி மகாநாடு.

தஞ்சை ஜில்லாவின் இரண்டாவது சுயமரியாதை மகாநாடு, சென்ற 18, 19-6-32 சனி, ஞாயிறுகளில் மன்னார்குடியில் நடைபெற்றது. அம்மகாநாட்டுடன் தொண்டர் மகாநாடும் நடைபெற்றது. தஞ்சை ஜில்லாவின் முதலாவது மகாநாடு சென்ற ஆண்டில் தாங்கம்பாடியில் நடைபெற்றபின் சென்ற ஆண்டிலேயே நன்னிலம் தாலூக்கா மகாநாடு நன்னிலத்திலும், நாகபட்டணம் தாலூக்கா மகாநாடு நாகபட்டணத்திலும், சென்னைமாகாணச் சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு திருவாரூரிலும் நடைபெற்றன. இன்னும் பல பொதுக்கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறு தஞ்சைஜில்லாவில் பல சுயமரியாதை மகாநாடுகளும், அடிக்கடி பல ஊர்களில் பல பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், கிணற்றுத்தவளைகளாக இருந்துகொண்டிருக்கும் நமது வைதீக எதிரிகளில் பலர் தஞ்சை ஜில்லாவில் சுயமரியாதை இயக்கம் ஆதரவற்று மாண்டுபோய் விட்டதென்று கனவு கண்டுகொண்டும், அக்கனவை உண்மையென்று அறியாமையால் நம்பிப்புரளிபண்ணிக் கொண்டுமிருந்தனர். இத்தகைய அறிவற்றோர்க்கு மன்னார்குடி மகாநாடு நல்ல புத்திகற்பித்திருக்குமென்பதில் ஐயமில்லை.

தஞ்சைஜில்லாவில் சிறந்த வைதிகக்கோட்டையாக இருப்பது மன்னார்குடியேயாகும். அனேகமாக நமது மாகாணத்திலேயே மன்னார்குடியைப்போல பார்ப்பனர்கள் நிறைந்த இடமும், வேறு ஒன்றுமில்லையென்று சொல்லலாம். இதுவும் அல்லாமல் தற்சமயம் காங்கிரஸ் பெயரால் ஏதாவது கிளர்ச்சி செய்துகொண்டிருக்கின்றவர்கள் சிலராவது இருக்கின்றார்கள் என்று சொல்லக்கூடிய இடம் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒன்று இருக்கின்றது என்று யாரேனும் சொல்லுவார்களேயானால் அது மன்னார்குடியேயாகும். 'தஞ்சாவூர் ஜில்லாவில் காங்கிரஸ் கிளர்ச்சி பலமாக இருக்கின்றது' என்று சொல்லப்பட்டு வந்தகாலத்தில் அவ்வாறு சொல்லுவதற்குக் காரணமாக இருந்தது மன்னார்குடியேயாகும். இத்தகைய வைதிகரும், பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும் நிறைந்த ஒரு ஊரில் நமது மகாநாடு நடைபெறுகிறதென்றால் அது ஒன்றே நமது இயக்கம் எவ்வாறு பரவி வருகிறது என்பதற்குத்தகுந்த உதாரணமாகும். மன்னார்குடியில் நமது மகாநாடு நடைபெற்றதைக்கொண்டு இனி எந்த வைதீகமானாலும் சரி, வேதங்களானாலும் சரி, குருமார்களானாலும் சரி, மதஸ்தர்களானாலும் சரி, இயக்கங்களானாலும் சரி, பிரசாரங்களானாலும் சரி, நமது இயக்கத்தை ஒழித்துவிட முடியாது. இவ்வியக்கத்தின் தத்துவமாகிய சமதர்ம வெள்ளம், மதங்கள், புரோகிதம், சாதிகள், சாத்திரங்கள், உயர்வு தாழ்வுகள், சுயநலங்கள், மூடநம்பிக்கைகள், குருட்டுப்பழக்க வழக்கங்கள் ஆகிய அணைகளையெல்லாம் அடியோடு பெயர்த்துக்கொண்டு எல்லா மக்களையும் இழுத்துக்கொண்டு பகுத்தறிவுச் சுதந்தர கடலில் போய்ச் சேருவதில் எள்ளளவும் ஐயமில்லையென்று அறியலாம்.

மன்னார்குடி மகாநாடு மற்றொருவகையில் குறிப்பிடத்தகுந்த ஒரு பெருமையுடைய மகாநாடாக விளங்கினது போற்றத்தக்கதாகும். இதுவரையிலும் நடைபெற்ற மகாநாடுகளிலெல்லாம் பெண்கள் மகாநாட்டைத் தவிர சுயமரியாதை மகாநாடுகளில் ஆண்களே தலைமைவகித்து வந்தார்கள். ஆனால் மன்னார்குடி மகாநாட்டிலோ, நமது இயக்கத்தின் உண்மைத்தோழர்களில் ஒருவராகிய திருமதி குஞ்சிதம் அவர்கள் பி. ஏ., எல். டி., தலைமைவகித்தது நமது இயக்கம் எவ்வாறு பெண்களின் சமத்துவத்திற்கு உண்மையோடு உழைத்து வருகிறது என்பதைக்காட்டுவதற்கு ஒரு உதாரணமாகும்.

மன்னார்குடி மகாநாட்டில் பல திறப்பட்ட அரசியல் அபிப்பிராயமுடையவர்களும் பலதுறையில் இருந்து கொண்டு சமூகச் சீர்திருத்தம் புரிந்து வருபவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தகுந்த மற்றொரு விசேஷமாகும். இதனால் வேறு வேறு துறையிலிருப்பவர்களும்கூட சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களை மறுக்கமுடியாதவர்களாக அதன் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும்படியான நிலைமை நமது இயக்கம் உண்டாக்கிவிட்டதென்ற உண்மையை யார் மறுக்க முடியும்?

நமது இயக்கத்தின் உண்மைத் தத்துவங்களை தெரிந்துகொள்ள முடியாத அறிவற்றவர்களும், நமது இயக்கக்கொள்கைகள் எங்கும் பரவிவிடுமானால் தங்களின் தனிமதிப்புக்கும் சுயநலத்திற்கும் இடமில்லாமல்போய்விடுமே என்றபயமும் சுயநலமும் உடையவர்களும் 'காந்தி' 'காங்கிரஸ்' 'சுயராஜ்யம்' என்ற பெயர்களைச் சொல்லி தலைவர் பட்டமும் தேசாபிமானப்பட்டமும் பதவிகளும் அடையவிரும்பும் போலிகளும், தற்சமயம் நமது இயக்கத்தைப் பற்றித் தப்புப்பிரசாரம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள்; இக்கூட்டத்தார்கள் தாம், நம்மை, 'தேசத்துரோகிகள்' என்றும் 'நாஸ்திகர்கள்' என்றும் 'வகுப்புத்துவேஷிகள்' என்றும் சொல்லிக்கொண்டுவருகிறார்கள் இவர்கள் கூற்று சுயநலமுடையதும் யோக்கியப்பொறுப்பில்லாததும் ஆனது என்பதை மகாநாட்டின் தலைவர் திருமதி குஞ்சிதம் அவர்கள் தமது முன்னுரையில்

'காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி 'அன்னிய ஆட்சி' என்றும் 'அன்னியத்துணி' என்றும், 'அன்னிய பாஷை' என்றும், சொல்லி நமது மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆங்கிலேயர்கள் அன்னியர்கள் என்றால் பார்ப்பனர்கள் [ஆரியர்கள்] யார்? என்று கேட்கிறேன். 'இங்கிலீஷ்' அன்னிய பாஷை என்றால் சமஸ்கிருதம் எந்தப் பாட்டன் வீட்டுப்பாஷை? என்று கேட்கிறேன். ஆகையால் அவர்கள் சொல்லுகிறபடி பார்த்தாலும், 400 வருஷத்திற்கு முந்திவந்த அன்னிய பாஷையை ஒழிப்பதற்குமுன் 2000 வருஷங்களுக்கு முந்தி வந்த அன்னியராகிய பார்ப்பனர்களின் ஆட்சியை ஒழிக்க வேண்டியது இன்னும் அவசியமல்லவா? அதுபோலவே 400 வருஷத்திற்கு முந்திவந்த அன்னியபாஷையை ஒழிப்பதற்குமுன் 2000 வருஷமாக நமது சமூகத்தில் 'பாராசரஸ்மிருதி' 'மநுதர்மம்' முதலிய கொடூரச் சட்டங்களைச் செய்த அன்னிய பாஷையாகிய 'சமஸ்கிருத பாஷை' யை அடியோடு அழிக்கவேண்டாமா? என்று கேட்கிறேன். ஆகையால் இந்தப் பசப்பு வார்த்தைகளிலெல்லா மயங்கிவிடாமல் நிதான புத்தியோடு ஆவேசங்கொள்ளாமல்; எந்தக்காரியத்தையும் யோசித்துச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.' என்று பேசியிருப்பதிலிருந்து அறியலாம்.

மன்னார்குடியில் நமது மகாநாட்டை நடத்தவொட்டாமல் செய்ய வைதீகர்களும், அவர்களுக்கு ஆதரவாயுள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர்களும், எவ்வளவோ முயற்சிசெய்தும் பலிக்காமல் மகாநாடு மிகவும் வெற்றியோடு முடிவு பெற்றது பாராட்டத்தக்கதாகும். பெரியமனிதர்களின் ஆதரவின்மையையும், வைதீகர்களின் விஷமப்பிரசாரத்தையும், அதிகாரிகளின் அதிக்கிரமங்களையும் சிறிதும் பொருட்படுத்தாமல் மகாநாட்டை வெற்றியுடன் நடத்துவதற்குக்காரணமாக இருந்தவர்கள் மன்னார் குடியில் உள்ள நமது இயக்க வாலிபவீரர்களே என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். ஆகவே எத்தகைய கஷ்டநஷ்டங்களையும் லட்சியம் பண்ணாமல் மகாநாட்டை வெற்றியோடு நடத்திய நிர்வாகிகளையும் மகாநாட்டின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்டவர்களையும் பாராட்டுகிறோம்.

## வைதீகர்களின் முட்டுக்கட்டை.

—:0:—

உலகமெங்கும், "சுதந்திரம்," "சமத்துவம்," "சகோதரத்துவம்," "விடுதலை" என்று கூக்குரலிடும் ஓசை செவியைத்துளைக்கின்றது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப் படுகுழியில் வீழ்ந்து கிடந்த பெண்களும் ஏழை மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், தொழிலாளர்களும், தங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக நின்ற கோட்டைகளைத் தகர்த்து ஒழித்து தரைமட்ட மாக்கிக் கொண்டு வருகிறார்கள். இவர்களின் படையெழுச்சியினால், மதக் கோட்டைகளும், சாஸ்திரக் கோட்டைகளும், வருணாச்சிரம தருமக் கோட்டைகளும், சுயநலக் கோட்டைகளும், பகுத்தறிவுக் குண்டுகளால் அடியோடு பெயர்த்தெறியப் படுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவில் உள்ள உலகநிலையறியாத, பரந்த நோக்கமில்லாத வைதீகப் பிடுங்கல்கள் தர்ப்

பைப் புல்லுகளையும், பழைய பஞ்சாங்கக் கட்டுகளையும், சாத்திரக் குப்பைகளையும் காட்டி மேற்படி கோட்டைகளைக் காப்பாற்றமுயற்ச்சி செய்கின்றார்கள். ஆனால் இவர்களின் முயற்சி வீணென்று பள்ளிப் பிள்ளைகளும் அறிந்துபரிகசிக்கின்றார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இந்த வைதீகப் பிடுங்கல்களின் போக்கையும், மனப்பாங்கையும், முட்டாள் தனத்தையும் சென்ற 20—6—32-ல், தஞ்சை ஜில்லா திருவிடமருதூரில் கூடிய பிராமணர் மகாநாட்டின் தீர்மானங்களைக் கொண்டு உணரலாம். இனி அம்மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானங்களையும், அவைகளின் மூலம் அந்த ரட்சியடைந்த மூளையையுடைய வைதீக மக்களின் போக்கையும் கவனிப்போம்.

பெண்கள் விஷயமாக அம்மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானத்தில், பெண்கள் மகாநாடுகளை யெல்லாம் கண்டித்தும், பெண்கள் மகாநாடுகளெல்லாம் மேல் நாட்டுக் கல்விகற்ற பெண்களால் கூட்டப் படுகின்றதென்றும், அவர்கள் விரும்பும் சுதந்தரங்கள் மதத்திற்கும், சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் விரோதமானவை என்றும், ஆகவே, அவர்களுடைய அபிப்பிராயங்கள் இந்தியப் பெண்களின் அபிப்பிராயம் அல்லவென்றும், ஜன சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் எச்சரிக்கை செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வைதீகர்களின் புத்தியற்ற தன்மைக்கு இதை விட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இன்று பெண்கள் விரும்பும் சுதந்திரமும், சொத்துரிமையும், கல்வியறிவும், சுகாதார வாழ்க்கையும், ஆண்களைப் போல் வயது வந்த பின் தங்கள் விருப்பப்படி மணஞ் செய்து கொள்ளும் உரிமையும், விதவைகளாகி விட்டால் மறுமணம் புரிந்து கொள்ளும் உரிமையும், கணவனுடைய கொடுமையையோ, நடத்தையையோ சகிக்க முடியாதபோது மண விடுதலை செய்து கொள்ளும் சுதந்தரமும், தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள சட்ட சபைகளிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் இடம்பெறும் உரிமையும் கேட்கின்றார்கள். இவ்வுரிமைகளெல்லாம் இன்று ஆண்களுக்கு எவ்வாறு இருக்கின்றனவோ அவ்வாறு பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்று கேட்பதில் ஏன்ன தவறு இருக்கின்றது? இளம் வயதில் மாடு, கன்றுகளை விற்பனை புரிவதுபோல் பெண்களை மணம் செய்வித்து தாலியறுத்த பின் வீட்டின் மூலையில் உட்கார வைத்து, அவர்கள் தங்கள் இயற்கை உணர்ச்சியை அடக்கிக் கொள்ள முடியாமல் திருட்டுத் தனமாக அன்னிய புருஷருடன் இன்பம் அனுபவித்துக் கர்ப்பமாகிக் குழந்தை பிறந்தபின் அதைக்கழுத்தை முறித்துக் கள்ளிக்காட்டிலோ, சாக்கடையிலோ, கிணற்றிலோ, ஆற்றிலோ, குளத்திலோ எறியும்படி செய்வது மதத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும் சம்மதமா? கணவனால் வெறுக்கப்பட்ட, சொத்துரிமையும் கல்வியறிவும், ஆதரவும் அற்ற பரிதாபகரமான நிலைக்குரிய பெண்கள் விபசார வாழ்க்கையில் ஈடுபட்டு மானத்தை விற்று ஜீவனஞ் செய்யும் காரியந்தான், மதத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும் சம்மதமா? 'மதம்' 'பழக்க வழக்கம்' என்று கண்மூடிக் கதறிக் கொண்டிருக்கும் அறிவிலிகளால் தான் பெண்மக்கள் மேற்கூறிய கொடிய வாழ்க்கையில் ஈடுபட வேண்டியிருக்கிறதென்பதை பகுத்தறிவாளர் மறுக்க முடியுமா? இவற்றை யுணராத வைதீகர்கள் பெண்கள் விரும்பும் சுதந்தரத்தால் மதமும், பழக்க வழக்கங்களும் போய் விடும் என்று ஏன் பாழும் குரலெடுத்துக் கத்துகிறார்கள்?

அடுத்த படியாக ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர். இத்தீர்மானத்தில் குருவாயூர்முதலிய இடங்களில் நடைபெறும் ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகங்களைக் கண்டித்தும், தீண்டாதார் ஆலயங்களில் நுழைந்தால் சநாதனதர்மமும், இந்துமதசம்பிரதாயமும் அழிந்து விடுவதுடன் இந்து சமூகத்தில் கலகமும் வேற்றுமைகளும் உண்டாகுமென்றும், ஆகையால் காங்கிரஸ் இவ்வியக்கத்தை ஆதரிக்கக் கூடாதென்று எச்சரிக்கை செய்வதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கோயில் பிரவேசத்திற்காகச் சத்தியாக்கிரகம் பண்ண வேண்டும் என்கின்றவர்கள் இதைக் கவனிக்க வேண்டுகின்றோம். கோயிலுக்குள் நுழையும் உரிமை பெறச் சத்தியாக்கிரகம் பண்ணுகின்ற கஷ்டத்தையும் கோயில் பிரவேச உரிமை கிடைத்த பின், அந்தக் கல்லுச் சாமிகளுக்காகத் தாங்கள் பாடுபட்டுத் தேடும் செல்வங்களைப் பாழாக்கும் முட்டாள் தனத்தைப்போக்கப் பாடுபட வேண்டிய கஷ்டத்தையும் ஆலோசித்துப்பார்த்தால், இப்பொழுதே இக்கஷ்டங்களுக்கு இடம் இல்லாமல் தடுத்து விடலாம் அல்லவா? கோயில் பிரவேசத்திற்காகப் பாடுபடுவதை விட, கோயில்களின் பயனற்ற தன்மைகளையும் அவைகளால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் எடுத்துக் கூறி எவரையும் கோயிலுக்குப் போகாமலும், அதற்காகச் செலவு செய்யாமலும் தடுக்க முயற்சிப்பது எவ்வளவோ பயன்தரக் கூடியதென்பதே நமது அபிப்பிராயமாகும். ஜனங்கள் கோயில்களுக்குப் போவதையும், அங்கே கொண்டு போய் பணத்தைப் பார்ப்பனர்கள் வயிற்றில் போடுவதையும் நிறுத்தி விடுவார்களானால் கோயில்களும் அழிந்து போகும்; அவைகளைக் கட்டிக் கொண்டு அழும் வைதீகர்களும், பார்ப்பனர்களும் கொட்டம் அடங்கி மூலையில் உட்கார்ந்து விடுவார்கள். இதை விட்டு, கோயில் பிரவேசத்திற்கு என்று நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கும் வரையிலும் கோயில்களுக்கு மதிப்பும், பாமர மக்களின் செல்வங்களுக்குக்கேடும், சோம்பேரி வைதீகர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் பிழைப்பும் இருந்து கொண்டுதானிருக்கும். ஆகையால் கோயில்களை ஒழிப்பதற்கு வழிதேடுவதே சாலச் சிறந்ததென்று நாம் எச்சரிக்கை செய்கின்றோம். இந்த வகையில் பார்ப்பனர்களே கோயில்களைக் கட்டிக் கொண்டு அழுவதில் நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், கோயில்களாகட்டும், குளங்களாகட்டும், மற்ற எந்த பொது ஸ்தலங்களாகட்டும், அவைகளில் எல்லோரும் பிரவேசிக்கக் கூடிய உரிமையை நிலை நாட்டும் பொருட்டுச்செய்யப்படும்எந்தமுயற்சியையும்நாம்முழுமனதுடன்ஆதரிக்கின்றோம்பார்ப்பனர்கள் எதையும் தங்களுடைய ஏகபோக உரிமையாக அனுபவிக்கச் சுதந்திரம் பெற்றிருந்த காலம் மலையேறி விட்டதென்று எச்சரிக்கின்றோம்.

அடுத்தபடியாக "மத உரிமை" பற்றி நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தில், மத வுரிமைகளுக்கு விரோதமாகச் சட்டங்கள் ஏற்படுத்தக்கூடாதெனசர்க்காருக்கும் சட்ட சபைகளுக்கும் தடையேற்படுத்த வேண்டும் என்றும் மத சம்பந்தமான பழக்க வழக்கங்களில் அரசாங்கமும், சட்ட சபைகளும் தலையிடக் கூடாதென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த வைதீகர்களின் மனப் போக்கின்படி பார்த்தால், அரசாங்கம் என்று ஒன்று இருக்க வேண்டிய தேவையே இல்லை என்று கூறலாம். தேச மக்களின் கொடிய பழக்க வழக்கங்களைப் போக்கி அவர்களை நலமுடன் வாழச் செய்யவேண்டியதே அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இக்கடமையைச் செய்யாத அரசாங்கம் இருந்தும் பயனில்லை; இறந்தும் பயனில்லை. தன் மதத்தினர் தவிர அன்னிய மதத்தினரை யெல்லாம் அழிக்க வேண்டும் என்று கூறும் ஒரு மத உரிமைக்கு அரசாங்கம் தடை செய்யாமலிருக்க முடியுமா? புருஷன் இறந்த பின் அவன் மனைவியையும் காஷ்டத்தில் ஏற்றிக்கொலை செய்யும் மதவுரிமையை அரசாங்கம் தடைசெய்யாமலிருக்க முடியுமா? பெண்களைப் பொட்டுக்கட்டி விட்டு விபசாரத்தொழில் நடத்தச் செய்யும் மதவுரிமையை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? ஒருநாளைக்குப் பன்னிரண்டு மணி நேரமும் நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி உழைப்போர் உணவின்றி வருந்திச் சாகவும், நகத்தில் அழுக்குப்படாமல் வெல்வெட்டு மெத்தையிட்ட சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கும் சோம்பேரிகள் ஆதிக்கம் செலுத்தும் மதவுரிமைக்கு [அக்கிரமத்திற்கு] அரசாங்கம் எப்பொழுதும் இடங்கொடுத்துக்கொண்டிருக்க முடியுமா? ஆகையால் தேசம் நன்மையடைய வேண்டுமானால், மதவுரிமை, சாதியுரிமை, பழக்க வழக்கம் என்பவற்றை யெல்லாம் மூட்டை கட்டி "அட்லாண்டிக்" பெருங்கடலில் போட்டு விட்டுச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றவேண்டியதே முறையாகும். இத்தகைய அரசியல் சீர்திருத்தம் வருவதாயிருந்தால் தான் சுயமரியாதைக்காரர்கள் அரசியல் சீர்திருத்தத்தை ஆதரிப்பார்கள். இவ்வாறில்லாமல் இந்த வைதீகர்கள் விரும்புகின்றபடியும், காங்கிரஸ்காரர்கள் கேட்கின்றபடியும், மதப்பாதுகாப்புள்ள சீர்திருத்தம் எது வந்தாலும் அதைச் சுமரியாதைக்காரர்கள் ஆதரிக்கப் போவதில்லை. ஒரு சமயம் ஆதரிக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டாலும், மதப்பாதுகாப்பை ஒழித்துச் சமூகச்சீர்திருத்தச்சட்டங்களை ஏற்படுத்தவே முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலால், வைதீகர்கள் வேண்டும் மதப்பாதுகாப்புப் பூச்சாண்டி இனிப்பலிக்காதென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

அடுத்தபடியாக, சாரதா சட்டத்தைக் கண்டித்தும், இச்சட்டத்தை இந்து சமூகத்திலுள்ள பலரும், பல ஸ்தாபனங்களும் ஆதரிப்பதைக் கண்டித்தும், பால்ய விவாகத்தைத் தடை செய்வது மதத்திற்கு விரோதமென்றும், ஆதலால் சாரதா சட்டத்தைத் திருத்தவோ, ரத்துசெய்யவோ அரசாங்கம் ஆதரவளிக்கவேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவர்கள் தீர்மானத்திலேயே, சாரதா சட்டத்தை இந்துசமூகத்திலுள்ள பலரும், பலஸ்தாபனங்களும் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் போது சிலராகிய வைதீகர்கள் ஏன் கூச்சலிட வேண்டும்? இச்சட்டம் உண்மையிலேயே ஜனசமூகத்திற்கு நன்மையளிக்கக் கூடியதென்பதை அறிந்துதானே பலரும் ஆதரிக்கின்றார்கள்? அப்படியிருக்க ஏன் இவ்வைதீகர்கள் இதை எதிர்க்க வேண்டும்? "மதம்" என்ற குருட்டுத்தனம் தானே இவர்களுடைய அறிவை நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்க முடியாமல் தடைசெய்கின்றது? ஆகையால் இந்தவகையிலும் இவர்களுடைய தீர்மானம் ஒரு செல்லாக்காசு என்றுதான் நாம் கூறுவோம்.

கடைசியாக மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதாவது "வேதம் ஆகமம் முதலியவைகளைப் பிரசாரம் பண்ணுவதற்கும், புரோகிதர், கோயில் அர்ச்சகர்கள் முதலியவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வைதீககாரியங்களுக்கு அழிவுவராமல் காப்பாற்றுவதற்கும், வருணாச்சிரம தர்ம சபைகள் ஏற்படுத்துவதற்கும், இந்துமத தத்துவங்களைப் பிரசாரம் பண்ணுவதற்கும், மாணாக்கர்களிடம் வைதீக ஒழுக்கங்கள் உண்டாவதற்காகச் சிறுவிடுதிகளை ஏற்படுத்தவும் "தர்ம ஊழியர் சங்கம்" என்னும் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டும்" என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஒவ்வொரு சமூகத்தினரும் வேதாகமப்புரட்டுகளையும் புரோகிதப் புரட்டுகளையும், அர்ச்சகர்களின் அயோக்கியத்தனங்களையும், வருணாச்சிரம தருமஅக்கிரமங்களையும், பழைய குருட்டுப்பழக்கங்களையும் ஒழிக்க முயற்சி செய்யும் இக்காலத்தில், நமது பார்ப்பனர்கள் இவற்றை வளர்க்க முயற்சி செய்வது எவ்வளவு புத்திசாலித்தனமென்று யோசித்துப்பார்க்க வேண்டுகின்றோம். உண்மையில் இவர்களுக்கு தேசத்தின்மீது கவனமோ, ஏழைகளின் மேல் அனுதாபமோ, மற்ற தேசங்களைப் போல் நமது தேசமும் சிறந்து விளங்கவேண்டும் என்னும் ஆசையோ இருந்தால் இவ்வாறு மகாநாடுகள் கூட்டிப் பிற்போக்கான தீர்மானங்களைச் செய்வார்களா? என்று தான் கேட்கின்றோம். பண பலமும், பத்திரிகை பலமும், செல்வாக்குப்பலமும் படைத்த வைதீகப்பார்ப்பனர்கள் இப்பொழுது தீர்மானித்திருக்கிறபடி பல துறைகளிலும் நுழைந்து பிரசாரம் பண்ணவும், பார்ப்பனர்களை இன்னும் நம்பிக்கொண்டிருக்கும் பாமர மக்களில் பலர் இவர்கள் பிரசாரத்தினால் ஏமாறவும் கூடும். ஆனால் இது எப்பொழுதும் நிலைத்து நிற்க முடியாது என்பது மாத்திரம் நிச்சயம். காலச்சக்கரம் வெகு வேகமாகச்சுழன்று கொண்டிருக்கும் இந்நிலையில் இப்பார்ப்பனர்களின் வைதீகப்பிரசாரம், ஒரே முறையில் செய்யப்படும் சுயமரியாதைப் பிரசாரச் சண்டமாருதத்தால் சிதறிப்போய்விடும் என்பது நிச்சயம். ஆகையால் எங்கும் பகுத்தறிவும், விடுதலையும், சுதந்திரமும் உதயமாகிவரும் இக்காலத்தில், பார்ப்பனர்கள் மாத்திரம் இவ்வாறு இன்னும் ஏமாற்றிக்கொண்டிருக்க நினைப்பதும், அதற்காக மகாநாடு கூட்டுவதும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் வீண்! வீண்! வீண் என்று எச்சரிக்கை செய்கின்றோம். இத்தகைய அழுக்கு மூட்டை வைதீகர்களைக் கண்டிக்காத தேசியப் புலிகள் நம்மைத் "தேசியத்துரோகிகள்" என்றும், "சுயராஜ்ய விரோதிகள்" என்றும் கூறுவது வடிகட்டின அயோக்கியத்தனமல்லவா? இனியேனும் யார் உண்மையான சுதந்திரத்திற்குப் பாடுபடுபவர்களென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

---

## திரு. ஏ. ராமாநுஜலு.

சென்னை சமூக சீர்திருத்த சங்க உதவிக்காரியதரிசியும், தாழ்த்தப்பட்டோரில் தன்னை ஒருவராக மதித்து அருந்தொண்டாற்றி வரும் திரு. ஏ. ராமாநுஜலு அவர்கள் சென்னை ஜில்லா கல்விச்சபைக்கு சென்னை சமூக சீர்திருத்த சங்கத்தின் பிரதிநிதியாக ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டிருகிறார்.

---

## திருத்தம்.

சென்ற வாரக்குடி அரசில், "லால்குடி சுயமரியாதை மகாநாடு ஒத்தி வைக்கப் பட்டது" என்னும் தலைப்பின் கீழ் வெளியான செய்தியில் "விளம்பர அதிகாரி பி. எம். முத்து சாமி அறிவிக்கிறார்." என்றிருப்பதை "விளம்பர அதிகாரி டி. எம். முத்து அறிவிக்கிறார்" என்று நேயர்கள் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## அம்மன் தாலி களவு.

20—6—32 தேதி திங்கட்கிழமை காலை 6 மணி சுமாருக்கு காரைக்குடிக்குச் சமீபத்திலுள்ள அமராவதி புதூர் சிவன் கோவில் மீனாட்சி அம்மன் தாலியை யாரோ திருடிச் சென்று விட்டார்கள். இன்னும் தாலி அகப்படவில்லை. சர்வ சக்தி வாய்ந்ததாகச் சொல்லப்படும் அம்மனுக்கு தன் கழுத்திலுள்ள தாலியைக் காப்பாற்றச் சக்தியில்லாது போனது அம்மனின் அசக்தியை நன்கு நிரூபிக்கின்றது. எனவே கேவலம் இனியாகிலும் நம்நாட்டு ஜனங்கள் சாமி அம்மன் என்பதெல்லாம் பாழும் கல் என்பதை நன்குணர்ந்து சாமிகளின் பேரால் வீண் செலவு செய்யாதிருப்பார்களாக என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

யோகப்படுத்த வேண்டும். மனிதனை உயர்த்தக் கூடிய சக்தி அறிவொன்றேயாம்.

அறிவீனர்களும், ஏழைகளும், கொடியவர்களும் குழந்தைகளைப் பெருக்காவண்ணம் தடுக்கமுடியுமா? என்பதே கேள்வி? அறியாமையும், கொடுமையும் ஆற்றுப்பெருக்கெடுத்து நாகரீகமெனும் ஊரணியை கெடுக்காமலிருக்கச் செய்ய முடியுமா? இவ்வுலக மெப்பொழுதும் அறியாமைப் பேய்க்கடிமையாக இருக்கவேண்டுமா? பலாபலன்களை யாவரும் சிந்திக்கும்படி செய்யக் கூடிய அளவு நாகரீகம் உலகில் வளரும்படி செய்ய முடியுமா? பாரமாகவும்தொல்லையாகவும் கருதக்கூடிய தங்களால் பராமரிக்க முடியாத குழந்தைகளை ஏன் பெற வேண்டும். அவர்களுக்கு புத்தியையும் மனச்சாட்சியையும் ஞாயத்தையும் விட பெண்ணாசை அதிகமாக விருப்பத்தினாலல்லவா?

இவர்களைத் துண்டுப் பிரசங்கங்களின் மூலமாயும் வீண்பேச்சுக்களாலும் திருத்தமுடியாது. இன்னும் உபதேசங்கள் மூலமாயும் கொள்கைகள் மூலமாயும் திருத்தமுடியாது. ஆசை இப்பொழுதும், எப்பொழுதும்செவிடாகவே இருந்து வருகிறது. இச்சீர்திருத்த வழிகள் பலன்தரா. குற்றவாளிகளும் நாடோடிகளும் பிச்சைக்காரர்களும் இன்னும் எண்ணற்ற குறைகளும் நாள்தோரும் பெருகிக் கொண்டே வருகின்றன. சிறைச்சாலைகளும் அன்னசத்திரங்களும் நிறைந்திருக்கின்றன. மதம் பயனற்று தயங்கித்தவிக்கிறது. சட்டம் தண்டனை செய்யக்கூடுமே தவிர குற்றவாளிகளைச் சீர்திருத்தவாவது குற்றங்களை தளையவாவதுமுடியாது. கொடுமையின்கடுமை உயிர்ந்து வருகின்றது. இதற்கு விரோதமாகச் செய்கின்ற காரியங்கள் நள்ளிரவின் இருளைப்போக்க முயலும் மின்மினிப்பூச்சிகளின் செய்கைகளையே ஒக்கின்றன, ஆனால் நம்பிக்கை ஒன்றிருக்கிறது, அறியாமையும் ஏழ்மையும் தீமையும் உலகத்தை நிரப்புவது நின்றே தீரவேண்டும். ஒழுக்கநீதியாய் போதிப்பதனால் இக்காரியம் நடக்காது பேசுவதினாலோ நடந்து காட்டுவதன் மூலமாகவோ இக்காரியம் கைகூடாது. மதத்தினாலாவது சட்டத்தினாலாவது குருவினாலாவது மிருகபலம் அல்லது ஒழுக்கநியாயம் இவற்றின் வலி கொண்டும் முடிக்க முடியாது. இதனைச்சாதிப்பதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. கலைப்பெருக்கும் ஆராய்ச்சியும், மங்கையர் தயை சுதந்திரமுடையவர்களாகவும் தமக்கு தாமே அரசிகளாகவும் செய்யவேண்டும். மனிதவர்க்கத்தை கடைத்தேர செய்யக்கூடிய ஒரே பொருளான உண்மைகளை மாதர்தமை, தாய்களாகவேண்டுமா? வேண்டாமா? வென்பதை தாமே தீர்மானிக்கும் சக்தியை அவர்களுக்கு அளிக்கவேண்டும். இதுவே சரியான வழி இது மாதர்களுக்கு விடுதலையளிக்கிறது. இவ்விதமாகப்பிறக்கிறக் குழந்தைகள் போற்றி பராமரிக்கப்படும், அவைகளை தாய்மார்கள் அள்ளியெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து வெள்ளமெனச்சுரக்கும் பால் தருவார்கள், அவைகள் வீட்டிலே மட்டற்ற மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் உண்டாக்கும்.

சுதந்திரமுடையவர்களைக் காட்டிலும் அடிமைகளே உண்மையும் சுத்தமுமுடையவர்களென்று எண்ணுகிறவர்களும் கல்வியறிவைவிட பயமே நம்பிக்கையான வழிகாட்டியாக நம்புகிறவர்களும் பிறர் ஆணைகளைத்தலை மேற்கொள்ளுகிறவர்களே நல்லவர்களெனக் கருதுபவர்களும் அறியாமையெனும் படுகுழியிலிருந்து நற்குணமெனும் அழகியவாசனையுடைய மலர் தோன்றுவதாக நினைப்பவர்களும் அவர்களது கலவரமும் குழப்பமுமடைந்த முகங்களைத்தமது கைகளால் மூடிக்கொள்ளட்டும்.

இன்னும் ஒழுக்கமெனும் உயரிய பொருளைத்தேடுவதற்கு அறிவெனும் இரவிபகையென்பவர்களும் அந்தகார இருளில் பரிசுத்தம் வசிப்பதாக கருதுகிறவர்களும் மனிதர்களுக்கு தங்களைப்பற்றியும், தங்கள் வாழ்க்கையை பாதிக்கின்ற இயற்கை விஷயங்களைப்பற்றியும், தெரிந்து கொள்ளுதல் தீமையென கருதுகின்றவர்களும், ஆசையை அடக்கி ஆளும் ஒரு நாயகனை நாம் அறிவைக்குறிப்பதைக்கண்டு அலமலந்து பயப்படுவார்கள்.

ஆனால் நான் ஆண்களும் பெண்களும் தங்களுக்குள்ள பலாபலன்களை அறியும் சக்தியினாலும் அறிவினால் விளையும் ஒழுக்கத்தாலும் வியாதிகளையும் துக்கத்தையும் உலகத்தைவிட்டு ஓட்டக்கூடிய ஒரு காலத்தை எதிர்பார்க்கிறேன்

அக்காலம் வரும்பொழுது சிறைச்-

சாலைகளின் மதில்கள் தகர்த்தெறியப்பட்டுவிடும். காவற்கூடங்களில் வெளிச்சம் திருவப்பட்டு, இரும்பு மக்களைத் தூக்கிவிடும் தொல்லையு மொழியும். ஏழ்மையும் தீயகுணங்களும் சந்ததியற்றுப்போகும். மக்கள் பசிப்பிணியால் நைந்த மெலிந்த கரங்களை பிச்சைக்காக நீட்ட மாட்டார்கள். உலகம் பூராவும் சுதந்திரமும் உன்னதமுமடையும்.

மதம் ஒருக்காலமும் மக்களை சீர்திருத்தாது. அடிமைத்தனமே மதம். பயமெனும் மதில்களையும் கோட்டைகளையும் உடைத்து சுதந்திரத்தோடு, வருங்காலத்தை நேர்முகமாக எதிர்ப்பது அதனினும் எத்தனையோ மடங்கு மேலானதாகும். இன்னும் சில வேளைகளில் கவலையற்றுத் தன்னை மறந்திருப்பதும், வந்தன வற்றைஎற்று அதற்கொப்பநடத்தலும், கண்மூடித்தனமான உலக சக்தியில் மிதப்பதும் நினைவிலும் கனவிலும் காலத்தைக் கழிப்பதும், உயிர்களின் கட்டுப்பாடுகளையும் சங்கிலிகளையும் மறப்பதும், நமது நோக்கத்தையும் முடிவையும் மறப்பதும், மனம் கட்டுகின்ற காட்சி மாளிகையில் சயனித்திருப்பதும், அனுபவித்த சுகங்களை நினைத்து மகிழ்வதும், வாழ்க்கையில் ஆரம்பத்தை திரும்பக் கொண்டு வருதலும், இறந்தவர் தம் உருவங்களையும் முகங்களையும் திரும்பக் காணுதலும், வரும் வருஷங்களில் விளைவிப்பதற்காக அழகிய படக்காட்சிகளைப் போன்ற மனோராச்சியங்கள் செய்வதும், தெய்வங்களையெல்லாம் இன்னும் அவற்றினுடைய வாக்குத் தத்தங்களையும் பயமுறுத்தல்களையும் மறப்பதும், வாழ்க்கை இன்பமான இரத்தோட்டத்தை உங்கள் நரம்புகளில் கண்டு உற்சாகப்படுவதும் போர் முரசுக்கேற்ப உங்களது பயமற்ற இருதய நாடி அழகாக அடிப்பதும் இவையெல்லாம் மதமெனும் அடிமை தனக்கும் எவ்வளவு மேலானது!

அப்பால் நல்லன யாவையும் நாடிச் செய்ய விரைதல், அறிவு பணித்த மனோதத்தை எண்ணித் துணிந்தியற்றுதல் அழகிய மனவெழுச்சிகளுக்கு இறக்கைகள் தந்து அவைகளைத் தேனீக்கள் போன்று கழிவுறு மலர்கள் போன்ற கடையான பொருள்களிடத்திருந்தும் கூட கனிசுரு அமிர்தம் போன்ற கலைகள் கொண்டு வரச் செய்தல், தைரியமான தேறிய கண்களால் உண்மைகளைக் காணுதல் முற்காலத்திற்கு இக்காலத்திற்குமுள்ள நுண்ணிய தொடர்புகளைக் காணுதல், நொந்தார் சுமைகளை ஏற்றுத் தாங்குதல், அறிவை வளர்த்தல், நியாயத்தைப் பார்த்துக் காத்தல் ஆத்மாவிற்கு ஒரு அழகிய அரண்கட்டுதல்.

ஆகிய இவையன்றோ உண்மை மதம் இவற்றைச்செய்தலல்லவா உண்மையான வணக்கம்.

## சிவகெங்கை சீர்திருத்த மணம்.

தமிழர் கைத் தொழில் கல்வி நிலைய காரியதரிசியாயிருந்த தோழர் சோமசுந்தரம் அவர்களுக்கும் இராமநாதபுரம் தோழர் காத்த முத்து அவர்களின் புதல்வி கமலாம்பாள் அவர்களுக்கும் 17—6—32 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிராமணச் சடங்கு அற்ற முறையில் சீர்திருத்த மணம் நடை பெற்றது.

அது சமயம் பல தோழர்கள் பரிசுகள் வழங்கினார்கள். தமிழர் கைத் தொழில் கல்வி நிலைய மாணவ மாணவிகள் திருமண உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுத்தார்கள். மணமகன் தம் சீர்திருத்த மணத்திற்கு அன்பும் ஆதரவுமாயிருந்த தோழர் யாவர்க்கும் தம் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதாகவும், தம் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகள் அளித்த மகிழ்ச்சி வெளியீட்டினால் தாம் பெரிதும் பொருப்பை உணர்வதாகவும், தெரிவித்து தமிழர் கைத் தொழில் கல்வி நிலையத்திற்கு இனாமாக 'குடி அரசு' பத்திரிகைக்கு ரூ. 3—0—0 கொடுத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

Read.
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

உங்களுக்கு
லைப் இன்ஷ்யூரன்ஸ் இன்றியமையாதது.
இந்தியாவின் மிகவும் பெரியதும்
சிறந்ததுமான
ஓரியண்டல்
கம்பெனியில் இன்ஸ்யூர் செய்து
சுதேசியை ஆதரியுங்கள்.

| | |
|---|---|
| வருஷ வருமானம் ... | ரூ 245 லட்சம் |
| வருஷமொன்றிற்கு பாலிஸிதார்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் செலுத்தும் தொகை. ... ... | ரூ. 100 ,, |
| வருஷத்தில் சராசரி லாபம். ... ... | ரூ. 39 ,, |
| மொத்த தொகை இருப்பு. ... ... | ரூ. 1131 ,, |

பம்பாயிலிருக்கும் கம்பெனி மானேஜருக்காவது அல்லது திருச்சினாப்பள்ளியிலிருக்கும் பிராஞ்சு காரியதரிசிக்காவது எழுதினால் ரூல்ஸ் புஸ்தகமும் பிரிமிய விவரங்களும் அனுப்பப்படும்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

லீஸ் ஜவான்கள் தோழர் கைவல்யத்தைப்பின் கட்டாகக்கட்டிக்கொண்டு வந்தனர்! அதற்குப்பின்னால் பல்லாயிரக்கணக்கான பௌத்தர்களை விலங்கிட்டுக்கொணர்ந்தனர். அக்கூட்டத்தின் முன் அணியில் தோழர்களான லக்ஷமிநர்சு, அப்பாதுரையார், இராஜரத்தினம், பிரம்மாச்சாரி, ஸ்ரீமதி அன்னபூரணி முதலியோர் காணப்பட்டனர். அவர்களையும் முன்கூறிய கூட்டத்தோடு சேர்த்துக்கதவைப்பூட்டினர்.

சற்று நேரத்திற்கெல்லாம் சிருங்கேரிமடம் சங்கராச்சாரி அங்கு விஜயமானார்! அவர் அம்மாபெருங்குழுவினரைப் பார்த்து 'ஹே! பேதைகாள் ஹே! அறிவிலிகாள்!! ஹே! சமணர்காள்!!! ஹே! நாஸ்திகர்காள்!!!! நீவிரெல்லோரும் ஆக்கிக்காத்தழிக்கும் கடவுள் ஒருவருண்டென நம்பாமல் கண்டது காட்சி, கொண்டதுகோலமெனத்திரிந்தீர்கள். ஸ்ரீமந்நாராயணனே உண்டாக்கியருளிய நான்கு வருணத்தையும் ஒழித்து ஏகமாக்க முயற்சித்தீர்கள்; வேதத்தை இகழ்ந்தீர்கள், புராணஇதிகாசங்களைநெருப்பிலிட்டும் கொளுத்தவேண்டுமென்றீர்கள்; பூதேவர்களாகிய பிராமணர்களை இகழ்ந்தீர்கள்; கோவில் குளங்களைத்தொலைக்க வேண்டுமெனக்கோஷமிட்டீர்கள்; இவையெல்லாம் உங்கள் அழிவு காலத்தின் அறிகுறியென உங்களுக்கு அப்பொழுது படவில்லையல்லவா? இப்பொழுது ஸ்ரீமந்நாராயணனே மஹான் காந்தியாக அவதாரம் செய்தார். துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் பண்ணுவது ஸ்ரீமந் மஹாவிஷ்ணுவின் கடமையாதலால் அவர் காந்திஜீயாக அவதாரம் செய்தவுடன் மிலேச்சர்களாகிய வெள்ளையர்களை இந்நாட்டைவிட்டுத்துறத்தினார். வேதங்களுக்கும் இப்பொழுது மாதம் மும்மாரி பொழிகிறது. தர்மதேவதை நான்கு கால்களாலும் நடக்கிறது! (மிருகம் போலும்) இன்னும் நீங்கள் வேதங்களை நம்பி பிராமணர்களைப்பணிந்து பரம பக்தர்களாய் நடவாதபடியால் நாஸ்திகர்களாகிய உங்களையெல்லாம் கழுவிலேற்றி சித்திரவதை செய்து ஆவியைப்போக்க உத்தரவாகியிருக்கிறது. இப்பொழுதாவது நீங்கள் பக்தர்களாகத்திரும்பி விபூதி, உரித்திராக்கம், துளபமணி, திருமண் பூண்டு எம்பெருமானை வழிபட்டு மனுநீதிக்கடங்கி நடக்கப்போகிறீர்களா, அல்லது இதோ இக்கழுவிலேறிச்சாகப்போகிறீர்களா? சொல்லுங்கள் சீக்கிரம்' என அதிகாரதோரணையில் கூறிமுடித்தார்! இப்பிரசங்கத்தைக்கேட்டவுடன் அடைபட்டிருந்த கூட்டத்தாரிடையே பரபரப்பு மிகுதியாக ஏற்பட்டது.

தோழர் கைவல்யம்:—(ஆவேசத்துடன்) எங்கே! இப்பொழுதாவது உங்கள் எட்டை நீரில்விட்டு எதிர்த்துச் செல்வதைக்காட்டுங்கள் பார்க்கலாம், சென்றால் ஒப்புக்கொள்கிறோம்.

தோழர் அப்பாதுரையார்:—எங்கே! உங்கள் ஓலைச்சுவடிகளையெல்லாம் ஒன்றாய்க்குமியுங்கள்! நான் ஒரே மேச் (நீக்குச்சி) கிழித்து அதில் வைத்துப்பார்க்கிறேன்! வேகாமலிருந்தால் ஒப்புக்கொள்வோம்.

சங்கராச்சாரி:—சட்! சட்!! இதெல்லாம் நாஸ்திகம்! இவ்வாறு பேசினால் பல்லைப்பிடுங்கிவிடுவேன் நாவை அறுத்துவிடுவேன்; ஜாக்கிரதை!

சு. ம. கோஷ்டியினர்:—ஐயரே! இந்தப்பாச்சா பலிக்காது!

சங்கராச்சாரி:—சரி! அடேய், சேவகா! எல்லோரையும் நாளைக்காலையில் ஒரே அடியாய் எமலோகத்திற்கனுப்பிவிட வேண்டியதுதான் அதன்பிறகுஇந்தப்பாதகர்களின்பூண்டே இல்லாதுபோய்விடும் (மறுபக்கம் திரும்பி) திரு. எம். ஸி. ராஜா அவர்களே! நீங்கள் என்ன செய்தி?

திரு. ராஜா:— (வணக்கத்துடன்) அடியேன் தாசன்!

சங்கரர்:— பேஷ்! சந்தோஷம்! பின்னால் புராணம் எழுதுகையில் நீவிரும் மற்றும் உம்மைப்போல் நம்மை அடிபணிபவர்களும் 'வானரர்கள் என்ற திருப்பெயரால் அழைக்கப்படுவீர்கள்! போய் வாருங்கள்!

இந்தத்தர்பார் நடந்துகொண்டிருக்கையில் பிராமணக்கோஷ்டியிலிருந்து இரண்டு கண்கள் என்னையும் சகோதரி நீலாவதியாரையும் உற்றுப் பார்ப்பதைக்கண்டேன். அதை நான் சகோதரியாரிடம் தெரியப்படுத்துமுன் இரண்டு ஆச்சாரிமார்கள் ஓடிவந்து ஓகோ! இவர்களையும் பிடியுங்கள்; கட்டுங்கள்; உதையுங்கள்; பெண்களுக்கு எக்காலத்தும் சுதந்தரம் கிடையாதென ஸ்மிருதிகள் எல்லாம் கூறுகையில் இந்த நீலாவதி—பெண்களும் ஆண்களும் சமந்தான்; பெண்களாகிய நாங்கள் ஆடவர்களுடன் போரிட்டேனும் எங்கள் சுதந்தரத்தைப்பெறுவோம்; என்கிறாள், அடுப்பூதும் பெண்டிர்க்குப் படிப்பெதற்கென்றால் அறிவுள்ள ஆண்களுக்கு உத்தியோகமெதற்கு? என்றெல்லாம் இவள் பேசினாள். பிடியுங்கள் அவளை இதோ! நிற்கிறானே இந்தப்பயல்! விதவையாய்ப்போனவள் தாராளமாய் மறுபடி கல்யாணம் செய்து கொள்ளலாமெனக்கூறுகிறான்; அதற்காக பாகீரதி அல்லது ஓர் பால்ய விதவையின் பரிதாப நிலை என்னும் ஓர் புத்தகத்தையும் எழுதிப்பரப்பிவிட்டான். போதாக்குறைக்கு ஜாதிவிட்டு, மதம் விட்டு, ஓர் விதவையையும் கட்டிக் கொண்டான்; விடாதீர்கள் இந்தப் பயலையும்' என்று குதித்தார்கள்!

இதைக்கேட்டதும் என் மனம் சகோதரியாரின் முகத்தில் கோபத்தால் இரத்தம் குதித்தேறியிருந்தது. இச்சமயத்தில் தொப்பையை முன்னால் தள்ளிக்கொண்டு குதிர்போல் ஒருபூதம் என்முன்னே வந்து 'ஏண்டா ருத்திரப்பதரே!' என்று கூறிப் பல்லைக்காட்டி என்கையைப்பிடித்தது, நான் பல்லைக்கடித்தேன் அப்பூதம் தனது மறுகையால் சகோதரியாரின் கையைப்பற்றிப்பல்லைக் காட்டிற்று. அதற்கு மேலும் பொறுமையை வகிக்க நான் தருமபுத்திரர் அல்லவாதலால் 'படே'ரென கன்னத்தில் ஓர் அடி விட்டேன் 'இதென்னடா சனியன்! இருந்தாற்போலிருந்து பேய் போலறைந்தானே!' என்று கூவிக்கொண்டு எங்கள் இருவர் கைகளையும்விட்டு விட்டு அப்பால் நகர்ந்தது அப்பூதம். ஆனால், உடனே ஆச்சாரியார் கூட்டத்திலிருந்த இன்னொரு பெரும் பூதம் கோபத்தோடு குதித்துவந்து 'நாஸ்திகப் பயலே!' என உறுமிக்கொண்டு என்னைக்கட்டிப்பிடிக்க மேலே கையைப் போட்டது, அதற்கும் ஓர் பூசை போட எண்ணி 'என்னடா ஆஸ்திக முண்டமே' என்று கூவிக்கொண்டு கையை ஓங்கினேன். அச்சமயம் என்மனம் கொதித்துக்கொண்டிருந்த காட்டத்தில் அந்த அடிபட்டிருந்தால் அந்தப்பூதம் மறுநிமிடம் மண்ணைக்கவ்வியிருக்கும்! ஆனால் நான் அடிக்கக்கையை ஓங்கிய அதே சமயத்தில், 'என்ன மிஸ்டர்! என்ன இது? ஏதாவது கனவு காண்கிறீர்களா? என்று கேட்டுக்கொண்டே எனது நண்பர் பொன்னையா என் கையைப் பலமாய்ப்பிடித்தார்! சடாரென கண்ணைவிழித்துப்பார்த்தேன்!

ஆ! என்ன பயங்கரமான கனவு இவ்விஷயங்கள் எல்லாம் விபரமாக நான் அறிந்துகொள்ள முடிந்ததெனினும் இந்த என் கனவு ஐந்தே நிமிஷங்களுக்குமேல் நீடித்திருந்திராது. ஆனால் நான் விழித்துக்கொண்டவுடன் எனது ஐந்து நிமிஷக்கனவில்கண்டவற்றின் பிரமிப்படங்க அரைமணி நேரம் பிடித்தது!, (கதையை அல்ல, கருத்தை உணருங்கள்)

---


## South Indian Railway Company Ltd.,

(Incorporated in England)

*Introduction of 3rd class cheap day return tickets in local booking on the Coimbatore-Palghat Section*

With effect from 1st July, 1932, 3rd class return tickets will be issued locally between the undermentioned—stations at the following reduced fares.

| | | Return 3rd class fares. Rs. As. Ps. |
|---|---|---|
| Coimbatore, Podanur | to Palghat or vice versa. | 1— 2—0. |
| Coimbatore, Podanur, Palghat | to Walayar or vice versa. | 0— 8—6. |
| Coimbatore, Podanur | to Kanjikode or vice versa. | 0—12—0. |

2. These return tickets will be availab'e by all trains carrying passengers, including mail.

3. The return journey must be completed by midnight of the day of issue.

4. No refund will be allowed if the tickets are not used.

5. Holders of wrong halves of tickets will be dealt with as passengers without tickets.

6. The tickets are not transferable.

7. Children under 12 years of age will be charged half the concession return fares specified above.

8. Passengers holding these return tickets are not entitled to reserved accommodation.


---

**இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?**

## பாலசுப்பிரமணியம் சௌந்திரவல்லி திருமண நிகழ்ச்சி.

15—6—32-ந் தேதி புதன் கிழமை திருச்சி வக்கீல் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கட்கும், வேலூர் ஜில்லா மெடிக்கல் ஆபீசர்கேப்டன் எஸ். கே. பிள்ளை அவர்களின் புதல்வி திருநிறைச் செல்வி சௌந்திரவல்லி அம்மாளுக்கும் பெங்களூர் காக்ஸ் டவுன் 26 வது எண்ணுள்ள பங்களாவில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் கொட்டகையானது வெகு நூதனமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. பிரமுகர்களும், பெரியார்களும், சுற்றத்தார்களும், தோழர்களுமாக எண்ணிறந்த மக்கள் விஜயம் செய்திருந்தனர்.

பின்னர் திரு. சோமசுந்திரம் எம். ஏ. எல். டி. அவர்களும், திரு. திருப்பராந்தக முதலியார் அவர்களும் முறையே மணமக்களுக்கு "இல்லறம்" என்பது பற்றி சிறிய சொற்பொழிவாற்றினர். பின்னர் மணமக்கள் இருவரும் மாலை, மோதிரம் முதலியன மாற்றிக் கொண்டு தம் வாழ்வில் ஒருவரை யொருவர் துணையாகக் கொண்டு நேசித்து வருவதாக வாக்குறுதி செய்து கொண்டனர். பின்தோழர் ஜே. என். இராமனாதன் அவர்கள் சீர்திருத்தத்திருமணம் என்பது பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். மற்றொரு விசேஷம் இதில் என்ன வென்றால் இத்திருமணம்உடனே போய் [Civil marriage act] பதிவு [ரிஜிஸ்டர்] செய்யப்பட்டது இது தான் மிகவும் கவனிக்கத் தக்கதாகும். புரோகிதமும், ஏனைய சடங்குகளும் அறவே ஒழிக்கப்பட்ட திருமணமாதலின் இது சட்டப்படி தகுதியுடையதாக்கரிஜிஸ்டர் செய்து இன்றியமையாததாகும்.

பின்னர் மணமக்களைவந்திருந்தவர்கள் ஆசிகூற மணமகன் திரு. பாலசுப்பிரமணியம் ஒரு சிறியசொற்பொழிவில் தான் தன் இஷ்டப்படி சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்ள நேர்ந்தமைக்கு மனம் மகிழ்வதாகவும் தானும் தனது துணைவியும் ஒத்து வாழ்ந்து சமூக சீர்திருத்தம் செய்ய முழுவதும் பிரயத்தனப் படுவதாகவும் கூறினர்.

பின் சுமார் இரண்டு மணி நேரம் இன்னிசை நடக்க, விஜயம் செய்தவர்கள் விருந்து அருந்தித்தம்வீடேகினரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(6ம் பக்கத்தொடர்ச்சி)

சன்மார்க்கமாகவும்,எனக்குயாதொரு தொந்திரவும் கொடுக்காமல் நீதியாக நடந்து கொள்ளுகிறவர்கள் சுயமரியாதைக்காரர்களென்பது நடக்கையாலும், அவர்களின் பிரசாரத்தாலும் யான் அறிகிறேன். என்னுடைய பத்து சன்மார்க்க போதனைகளின் பிரகாரந்தான் நடக்கச் சொன்னேனே யொழிய அவைகளுக்கு விரோதமாக நடந்துக்கொண்டு, என்னைப்போல் உருவம் செய்து கோவிலில் வைத்துக் கும்பிடச் சொல்லியோ, ஏழைகளுக்கு குடிக்கக் கஞ்சியும்,உடுக்க ஆடையும், படிக்கவீடுமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கும்போது எனக்கு 50, 60 லட்சம் பண சிலவில் கோவில், கோபுரங்கள் கட்டி எழு வேளை மணியடித்தும், தேர் திருவிழாக்கள் செய்தும், ஆயிரம் ரூபாய்கணக்கில் சைனுஜப்பான் வெடி பாணங்களை வாங்கி சுட்டு புகையாக்கவும் நான் சொல்லவேயில்லை வேண்டுமானால் எனது பைபில் புஸ்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து என்னைக் கேள்வி கேட்கட்டும். எவன் என்னை ஜெபதபங்கள் மூலமாக ஏமாற்றலாமென்று நினைத்துக்கொண்டும், என் கற்பனையின்படி நடக்காமல் பத்தனைப்போல் பாசாங்கு செய்து கொண்டும், எனக்கு தெரியாத ஓர் மோட்சலோகத்திற்கு போலிபக்தியால் என்னை ஏமாற்றி விட்டு போய்விடலாமென்றும், இவர்கள், கேட்டதை யெல்லாம் ஒத்துக்கொண்டு தலையாட்டுகிற பூமாடு என்று நினைத்தும் அவமானப்படுத்தியும் வருகிறானோ அவனை கட்டாயம் நரகத்தில் தான் போடுவேன். இது பரியந்தம் அப்பேர்ப்பட்டவர்களைத் தான் நரகத்தில் போட்டுமிருக்கிறேன் என்னைவிடமிகத்தெளிவாக மிஸ்டர் பரமசிவன் அவர்கள் தற்கால முற்கால புரோகிதர்களின் புரட்டை விளக்கிக்காட்டுவாரென்ற நம்பிக்கையுடன் எனது பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். (தொடரும்)

## திருமதி. சுப. விசாலாட்சி.

காரைக்குடி முத்துப்பட்டணம் திருமதி. சுப. விசாலாட்சி அம்மையாரவர்கள் ஒருவாரமாக உடல் நலிவால் பீடிக்கப்பட்டு இதுபோது சிறிது குணமுற்று வருகின்றார்கள் என்று நமது நிருபர் எழுதுகின்றார்.


## வெள்ளை வெட்டைக்கு

## சந்தனாதி மாத்திரை, பிரமேக நெய்

### சாப்பிட்ட 12 மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளை வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொருக்க முடியாத நீர்குத்தல், நீர்க்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர்விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, மஞ்சள் வெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி, சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரிய பையில் ஏற்படும் ரணம், கொதிப்பு முதலிய நீர்த்தாரையிலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்யும்.

சந்தனாதி மாத்திரை பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலை ரூ. 5—0—0.

## சாலாமிசிரி லேகியம்.

## சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

### மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0.

பாக்கிங் தபால் சிலவு பிரத்தியேகம், மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,தெப்பக்குளம் போஸ்டு,திருச்சிராப்பள்ளி

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் வாலிபர்கள் தான் என்று நினையுங்கள்.

## வாலிபமும், அரசியலும்.

வாலிபர்கள் அரசியலில் சேர்ந்து பாடுபடலாம் என்று சொல்லுவார்கள். தேச விடுதலைக்குப் பாடுபடாத வாலிபர்கள் பதருக்குச் சமானம் என்பார்கள். மாபெரும் யுத்தத்தில் இங்கிலாந்திலுள்ள 14 வயது 15 வயது வாலிபர்களெல்லாம் தேசவிடுதலைக்காக வெளியே புறப்படவில்லையா என்று சொல்லுவார். இது பூனைக்கும் எலிக்கும் ஒப்பிடுவதாகும் இங்கிலாந்து தானா இந்தியா? இங்கிலாந்திலுள்ளவர்கள் ஒரு மதத்தினர் இந்தியாவிலுள்ளவர் பல் வேறு மதத்தினர். இங்கிலாந்திற்கு ஒரு பாஷை. இந்தியாவிற்கோ பல பாஷை. இங்கிலாந்திலோ சாதிச்சண்டை கிடையாது, இந்தியாவிலோ பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பனை பண்ணி ஒருவன் மற்றொருவனை அடக்கி ஆளுகின்றான். இங்கிலாந்தில் சரஸ்வதி பூஜை இல்லை, என்றாலும் 100 க்கு 100 பேருக்கு எழுதப்படிக்கத் தெரியும், ஆகையினால் தான் சரஸ்வதி வெள்ளைகலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக்காரர் நாட்டில் வீற்றிருப்பாள் என்று சொல்லுகிறேன். இந்தியாவிலோசரஸ்வதிபூஜைவருடந்தோரும் நடக்கும் ஆனால் 100க்கு 90 ஆண் பிள்ளைகளுக்கும் 97 பெண் பிள்ளைகளுக்கும் படிப்பு வாசனையே தெரியாது. இங்கிலாந்திலுள்ளவர்கள் பகுத்தறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் இடந்தருகிறார்கள். இந்தியாவிலோ "பழமை பழமை" என்று சொல்லி பாழாய் போகின்றார்கள். மேல்நாடுகளில் ஆகாய கப்பல், கம்பியில்லா தந்தி போன்றவைகளைக் கண்டுபிடித்துக் கொண்டு போவார்கள். இந்தியாவிலோ சுண்ணாம்புக் கட்டியாகிய நாமத்தின் விசேஷத்தைப் பற்றியும், சாம்பலாகிய விபூதியின் மேன்மையைப் பற்றியும், பேசிக் கொண்டிருப்பார்கள். மேனாடுகளிலே கடவுளை அவ்வளவு தொந்திரவு பண்ணுகிறதில்லை. இந்தியாவிலோ கடவுளுக்கு தொந்திரவு சொல்ல முடியாது.

## வாலிபர் கடமை.

சகோதரிகளே, சகோதரர்களே!

நீங்கள் முன்னேற வேண்டுமானால், உங்கள் நாடு பொன்னாடு ஆக வேண்டுமானால் மதத்திமிர் கொண்ட மதங்களை ஒழியுங்கள், ஜாதிப்பேயை ஓட்டுங்கள். ஜாதியிலே, மதங்களிலே உங்கள் கருத்தைச் செலுத்தாதீர்கள், மதமும், ஜாதியும் நாட்டின் ஒற்றுமையைக்குலைக்கும். வாலிபர் இயக்கத்தில் பெண்களைத் தாராளமாக சேர்த்துக் கொள்ளுங்கள். பகுத்தறிவைக் கொண்டு எந்தக் காரியத்தையும் செய்யுங்கள். கல்வியை, அதிலும் பெண் கல்வியைப் பரப்புங்கள்- கலை, ஓவியம் இசையைப்பண்படுத்திப்பெருக்குங்கள் பாமர மக்களிடமிருந்து மூடப்பழக்க வழக்கங்கள், ஒழிவதற்கு வேண்டிய மார்க்கத்தைப் புகட்டுங்கள். பெண்களுக்கு ஓட்டுரிமை கொடுத்து ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்ட சபைகளிலும் அங்கத்தினராக ஆகும்படி செய்யுங்கள். ஆணுக்குபெண் அடிமை என்ற காலம் மலையேறி விட்டது என்று ஜனங்கள் காதில் இடித்துச் சொல்லுங்கள். பெண்களுக்குசொத்துரிமை விவாக உரிமை விவாக ரத்து உரிமைகளைக் கொடுக்க முயலுங்கள், வைதீகம் முதலாளித்துவமாகிய பூச்சாண்டிகள் இனிமேல் பகுத்தறிவுக்கு முன் நிற்காது என்று முழக்குங்கள்.

உள்நாட்டு கைத்தொழில் அபிவிருத்தியில் கருத்தைச் செலுத்துங்கள் சாரண இயக்கங்களிலும், பெண் வழிகாட்டி இயக்கங்களிலும் [Girl-guide movements] அதிகமாக சேருங்கள். தேகப் பயிற்சிக்கு வேண்டிய சாதனங்களைத் தேடுங்கள். கிராம புனருத்தாரண வேலையில் கருத்தை செலுத்துங்கள் ஜெர்மனி தேசத்தின் வாலிபர்களைப் போல் இயற்கையோடு சேர்ந்த சாதாரண வாழ்க்கையைப் பின் பற்றுங்கள் பொதுவாக உங்களை கேட்டுக் கொள்வதென்ன வென்றால் பொதுவான வாலிப சங்கம் ஏற்படுத்தி அதன் மூலமாக சமூக ஒற்றுமைக்காகவும், குடியை நாட்டை விட்டு அகற்றவும், சுதேசியத்தைப் பரவச் செய்யவும், கிராமங்களில் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தவும், நாட்டு கைத்தொழில் அபிவிருத்தி செய்யவும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்வது உங்கள் வேலையாக கருதுவீர்கள் என்று நம்புகிறேன். இதுவே தேசிய கொள்கை, இதுவே சுயமரியாதை கொள்கை. இதுவே நாட்டை உயர்வுக்கும், ஒழுங்குக்கும் கொண்டு வரும்.

புதுவை மகா ஜனங்களுக்கும் வரவேற்பு கமிட்டியாருக்கும் என் மனமார்ந்த வந்தனம்.

---

## நீடாமங்கலத்தில் சுயமரியாதைப்பிரச்சாரம்.

மன்னார்குடி மகாநாடு முடிந்து 20-6-32 காலைதோழர்கள் அ.பொன்னம்பலம் கே. முத்துச்சாமி வல்லத்தரசு. பி. எ. பி. எல். ராம சின்னையா நா. நமசிவாயம். சேமசுந்திரம். மாணிக்கம், கல்யாணி திருமதி. தனலட்சுமி பொன்னழகு. முதலியவர்கள் நீடாமங்கலம்வந்து சேர்ந்தார்கள்.

மாலை 6 மணிக்கு நீடாமங்கலம் ஸ்ரீனிவாசம்பிள்ளை சத்திரத்திற்கு முன்பாக ஒருபொதுக்கூட்டம்நடைபெற்றது.

அதுபோது "சுயமரியாதைஇயக்கம்" என்பதுபற்றி தோழர்கள். கே. முத்துச்சாமி வல்லத்தரசு. பி. எ. பி. எல் அவர்களும், அ.பொன்னம்பலம்அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள் தோழர். எ. ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறினார். பலதோழர்கள் கீதம் பாடினர். பெருந்திரளானமக்கள்கூடியிருந்தனர். என்று ஒருநிருபர்எழுதுகிறார்.


வெய்யற்காலத்தில் வெப்பத்தைப்போக்குவது;
மூளைச்சோர்வை நீக்குவது; மனமகிழ்ச்சியையும், ஊக்கத்தையும்,
முக அழகையும், வசீகர சக்தியையும் தருவது

எது?

# நமது
# பஞ்சாமிர்தங்கள்.

பண்டிட் ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலையில் தயாராகும்
வேனிற்கால வெளிப்பிரயோக அமிர்தங்கள் ஐந்து!

1. ஆனந்தரின் மகா சந்தனாதித்தைலம் 1-0-0
2. லேம்ஸ் அண்ட் கிளசரயின் 0-10-0
3. ஆனந்தா ஸ்னோ ... 0-10-0
4. கேசாமிர்தம் ... 0-8-0
5. அன்சோரா கிளிசரயின் 0-10-0

இவைகளை ஒரு முறை உபயோகித்துப்பார்த்தால் உண்மை விளங்கும்.

மானேஜர்:— தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

விரட்டுகிறார்கள். இந்த சின்ன விஷயத்தை யோசித்துப்பார்ப்பதற்கு நமது சைவப் பெரியார்களுக்கும், வைஷ்ணவப் பெரியார்களுக்கும் நேரம் இருப்பதில்லை. ஆனால் இந்த உண்மையை எடுத்துக்காட்டும் நம் மீது மாத்திரம் பாய்வதற்குத் தயாராயிருக்கிறார்கள். அதெல்லாம் போகட்டும். கோவில் கட்டினவர்களெல்லாம் என்னதான் வாழ்ந்துவிட்டார்கள் என்று கேட்கிறேன். தஞ்சாவூர் மகாராஜா கட்டாத கோவில் இல்லை. அவர் பார்ப்பனருக்கு விடாத மான்யமில்லை. கட்டாத அன்ன சத்திரம் இல்லை. இன்றைக்கு அவரது ராஜ்ய மெங்கே? அவர் பெயர் சொல்லவாவது ஆளுண்டா? அவர் தோண்டிய அகழைக்கூட தூற்றுவிட்டு ஆங்கிலேயர்கள் ரோடு போட்டுவிட்டார்கள். அவர் பார்ப்பனருக்குச் செய்த தருமமெல்லாம் என்னவாயிற்று? அவரால் அல்லவா இன்று இந்த ஜில்லாவில் மாத்திரம் இதர ஜில்லாக்களைவிட அதிகமான பார்ப்பனர்கள் கூடியிருக்க இடமேற்பட்டது? எந்தப்பார்ப்பானாவது, 'தஞ்சாவூர் ராஜாக்கள் எங்கள் முன்னோர்களைக் காப்பாற்றினார்கள், அவர்கள் ராஜ்யத்தைக் கொடுத்து விடுங்கள்' என்று சொன்னார்களா? இன்னும் உங்களுக்கு ஒரு சமீபகாலத்து உதாரணம் வேண்டுமானால் வடபாதி மங்கலம் 'முதலியார்கள்' இருவரும் பார்ப்பனர்களுக்கு தாசானு தாசராய் நடந்தார்கள். கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்தார்கள். ஒரு பெண்டாட்டிக்கு இரண்டு பெண்டாட்டி கட்டினார்கள், ஏதாவது பலன் ஏற்பட்டதா? இன்னும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களை எடுத்துக்கொள்ளுங்கள், கோவில் கட்டாத செட்டியாரே அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் அந்த சமூகத்தில்தான் வாரம் 4, 5, பேர்கள் (Insolvency) கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். 'அதெல்லாம் அவரவர் தலைவிதி' என்று சிலர் சொல்லலாம். அப்படியானால் 'தலைவிதி' யைக்கோவில் கட்டுவதாலும் பார்ப்பனருக்குத்தானம் கொடுப்பதாலும் வென்றுவிட முடியுமாஎன்று கேட்கிறேன்.

எனவே இதுகாறும் சொல்லியதிலிருந்து பார்ப்பனர்களுக்குக் கற்கோட்டையாகவும், ஜாதிக்கு மூலாதாரமாகவும் மதவிஷயத்திற்குப் பாத்திரமாகவும் இருக்கிற இக்கோவில்களை முதலாவதாக ஒழிக்கவேண்டியது நமது கடமையாகும். கோவில்கள் இருக்குமிடங்களில் ஆஸ்பத்திரிகள் ஏற்படவேண்டும். ஏனெனில் நமது 'கடவுளுக்கு' டாக்டர் வேலையெல்லாம் மறந்து போய்விட்டது, திருப்பதி வெங்கடாசலபதியின் மகந்துவுக்குப் பைத்தியம்பிடித்த காலத்தில் Col. Malcomson தான் அவரைக் குணப்படுத்த வேண்டியிருந்தது. இந்த ஜில்லா வைத்தீஸ்வர சாமிக்கோ வைத்தியம் மறந்துபோய் விட்டது. எந்தப்பழுத்த ஆஸ்திகனும் கூட தன் வீட்டுக் கர்ப்பஸ்திரீயை தாயுமானவர் சந்நிதியில் போட்டுவருவது கிடையாது. ஆதலால்தான் கோவில்களை ஆஸ்பத்திரிகளாக ஆக்கவேண்டுமென்றேன். அதிலுள்ள செல்வத்தையெல்லாம் சர்க்கார் பறிமுதல் செய்யவேண்டும். அந்தப்பணத்தைக்கொண்டு 7 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டாயக்கல்வியும், ஆளுக்கொரு வீடும் ஒவ்வொரு ஏக்கர் நிலமும் கொடுத்தாலும் எத்தனையோ கோடி ரூபாய் மிச்சப்பட்டுவிடும். பிறகு இந்தக் கோவில்கள் பெயரைச்சொல்லி சோம்பேறிப் பிழைப்புப் பிழைத்து வந்த குருக்கள், பட்டர், தீட்சதர், சங்கராச்சாரி, மகந்து, ஜீயர், பண்டார சந்நிதி முதலியவர்களுக்கும், அவர்களது பரிவாரங்களுக்கும் ஆளுக்கொரு மண்வெட்டியும் கூடையும் கொடுத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு குளமாவது வெட்டும்படி செய்யவேண்டும். இவைகளைச் செய்யக்கூடிய ஒரு அரசாங்கம் வருகிற வரையில்—அது எந்த அரசாங்கமாயிருந்தாலும் சரி—நமது சுயமரியாதை இயக்கம் உயிரோடு இருந்தே தீரும்.

### சுயமரியாதையும் காங்கிரசும்.

தோழர்களே, இனிகாங்கிரசுக்கும், நமக்கும் உள்ள சம்மந்தத்தைப்பற்றி சிலவார்த்தைகள் கூறவிரும்புகின்றேன். காங்கிரசின் அடிப்படையான கொள்கை வருணாச்சிரமமும் மதநடுநிலைமையுமாகும். ஆனால் நம்முடைய அடிப்படையான கொள்கையோ வருணாச்சிரமத்தையும், மதங்களையும் அடியோடு அழித்து விடுவதாகும். அதாவது ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் காங்கிரஸ் என்பது பார்ப்பனீயமாகிய 'இந்து' மதத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனமாகும். ஆனால் நமது இயக்கமோ அதை அழிப்பதற்காகவே ஏற்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனமாகும். காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாகிய திரு காந்தியோ இந்து மதம், முஸ்லீம் மதம், கிறிஸ்துமதம், ஆகிய மதங்களை அப்படியே வைத்துக்கொண்டு ஹிந்து—முஸ்லீம்—கிறிஸ்துவ ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். ஆனால் நாமோ இம் மூன்று மதங்களும் அழிந்தாலொழிய இந்திய மக்கள் ஒற்றுமைப்பட முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இன்னும் காங்கிரசோ பெயரளவில் ஏழைகளுக்காக பாடுபடுவதாகச் சொல்லிவிட்டு உண்மையில் முதலாளி (Capitalists) ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவே வேலை செய்கிறது. ஆனால் நாமோ, முதலாளி என்றும் தொழிலாளி என்றும் உள்ள வித்தியாசமே அடியோடு தொலைய வேண்டுமென்கிறோம். காங்கிரசோ தக்ளியினால் நூல் நூற்று துணி கட்டவேண்டுமென்கிறது. நாமோ தக்ளியும் ராட்டினமும் அநாகரீகமானதும் காட்டு மிராண்டிகள் காலத்துச் செய்கையுமாகும் என்கிறோம். இவ்விதமாக அடிப்படையான கொள்கைகளிலேயே நமது இயக்கத்திற்கும், காங்கிரசிற்கும் இவ்வளவு முரண்பாடிருக்கும்போது சுயமரியாதை இயக்கம் காங்கிரசைக் கண்டிப்பதில் பிழை என்ன இருக்கிறதென்று கேட்கிறேன்.

இந்தச்சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி "அன்னிய ஆட்சி" என்றும், "அன்னியத்துணி" என்றும், "அன்னிய பாஷை" என்றும் சொல்லி நமது மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆங்கிலேயர்கள் அன்னியரென்றால் பார்ப்பனர்கள் (ஆரியர்கள்) யார்? என்று கேட்கிறேன். இங்கிலீஷ் அன்னிய பாஷை என்றால் சமஸ்கிருதம் எந்தப் பாட்டன் வீட்டுப் பாஷை என்று கேட்கிறேன்.

ஆகையால், அவர்கள் சொல்லுகிறபடி பார்த்தாலும், 400 வருஷத்திற்கு முந்தி வந்த "அன்னி"யரின் ஆட்சியைத்தொலைப்பதற்கு முந்தி, 2000 வருஷங்களுக்கு முந்தி வந்த அன்னியராகிய பார்ப்பனரின் ஆட்சியை ஒழிக்கவேண்டுவது இன்னும் அவசியமல்லவா? அது போலவே, 400 வருஷத்திற்கு முந்தி வந்த "அன்னியபாஷையை" ஒழிப்பதற்கு முந்தி, 2000 வருஷமாக நமது சமூகத்தில் பராசர ஸ்மிருதி, மநுதர்மம் முதலிய கொடூரச் சட்டங்களைச்செய்த 'அன்னிய பாஷை' யாகிய சமஸ்கிருதத்தை அடியோடு அழிக்க வேண்டாமா என்று கேட்கிறேன். ஆகையால் சகோதரர்கள் காங்கிரஸ்காரர்களின் இந்தப்பசப்பு வார்த்தைகளிலெல்லாம் மயங்கிவிடாமல் நிதான புத்தியோடு, ஆவேசம் கொள்ளாமல் எந்தக்காரியத்தையும் யோசித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### நமதுஇயக்கமும்,பெண்மக்களும்.

கடைசியாக, தோழர்களே! நமது இயக்கம் பெண்மக்கள் முன்னேற்றத்திற்கு எந்தெந்த விதங்களில் வேலை செய்து வருகிறதென்பதைப் பற்றி மாத்திரம் இரண்டொரு வார்த்தைகள் கூறி இதை முடித்து விடுகிறேன்.

'ஔவை படித்திருந்தாள்' 'காரைக்காலம்மையார் படித்திருந்தாள்' என்று பழைய ஏட்டைப் புரட்டிப் பார்த்து வீண் பெருமை பேசிக் கொள்வதால் ஒரு பயனுமில்லை. இந்த நிமிஷத்தில் நமது நாட்டில் ஆயிரத்திற்கு எத்தனை பெண்கள் படித்திருக்கிறார்கள் என்பதே எனது கேள்வி, அதிலும் பார்ப்பனரல்லாத நமது பெண் மக்களில் கையெழுத்து போடக்கூடத்தெரியாத பெண்கள் எவ்வளவுபேர் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத்தெரியுமா? வயது முதிர்ந்த எழுதப்படிக்கத்தெரிந்த (literate) பெண்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கவேண்டுமென்று (Lothian Committee) யார் சிபார்சு செய்திருக்கிறார்கள். 'பார்ப்பனப் பெண்களிலோ, 1000-க்கு ஒருவருக்குங்கூட எழுதப்படிக்கத் தெரியாமலிருக்காது. ஆனால் நமது பெண்களிலோ, 1000-க்கு ஒருவருக்குத்தான் எழுதப்படிக்கத்தெரியும். இந்த நிலையில் ஒரு பார்ப்பனப்பெண்ணும் ஒரு பார்ப்பனரல்லாத பெண்ணும் தேர்தலுக்கு நின்றால் யாருக்கு வெற்றிகிடைக்கும் என்பதை நீங்களே சொல்லுங்கள். ஆண்களாகிய நீங்கள் எவ்வாறு பார்ப்பனீயத்தில் அகப்பட்டுக்கொண்டு வெளிவர முடியாமல் தவிக்கிறீர்களோ, அதே மாதிரி பெண்கள் சமூகத்தையும் கஷ்டப்படுத்துவதற்காகவா உங்கள் பெண்களைப்படிக்க வைக்காமலிருக்கிறீர்களென்று கேட்கிறேன்? இனி பெண்களுக்கு ஒரே ஒரு வார்த்தை. நீங்கள் எல்லோரும் ஆண்களின் கொடுமையினின்றும் மீளவேண்டுமானால் ஒருவர் தவறாமல் கல்வி கற்க வேண்டும். ஜட்ஜ் முதல் போலீஸ் வரையிலுள்ள எல்லா உத்தியோகங்களிலும் ஆண்களோடு போட்டி போடவேண்டும். அதுவரையில் நமது சமூகத்தைப் பிடித்திருக்கும் 'விதவை' த்தன்மை பாலியமணம் முதலியகொடுமைகள் ஒழியவே ஒழியாது. கல்யாணம் என்ற பெயரால் நமது பெற்றோர்கள் நம்மை ஆடுமாடுகளை விற்பதுபோல் நமக்கு இஷ்டப்படாத ஆண்களிடம் விற்றுவிட்டு நாம் ஆயுள் முழுதும் கண்ணீரும் கம்பலையுமாக நின்று தவிக்கும் கொடுமை ஒழியவேண்டுமானால் நம்முடைய பெண்கள் ஒவ்வொருவரும் படித்தாலொழிய முடியாது. இந்த ஜில்லாவில் பூ கட்டி வைத்துப் பார்த்தும், ஜாதகத்தைப்பார்த்தும், சகுனத்தைப்பார்த்தும், புராணத்தில் கயிறு சாத்திப்பார்த்தும் ஒரு பெண்ணை மற்றொரு ஆணோடு பிணைத்து விடுகிறார்கள். இது எவ்வளவு மதியீனமான செயல் என்பதை யோசித்துப்பாருங்கள். 3 அடி உயரமான பெண்ணுக்கும் 6 அடி உயரமுள்ள ஆணுக்குங்கூட "நல்ல பூ" கிடைத்து விடுகிறது. 14 வயதுப் பெண்ணுக்கும் 64 வயது கிழவனுக்குங்கூட "நல்ல" பாட்டு உதயமாகி விடுகிறது. ஒரு பெண்ணுக்கும் ஒரு கழுதைக்குங்கூட ஜாதகம் சரியாயிருந்து விடும். ஆகையால் ஜாதகம் சரியாயிருப்பதற்காக ஒரு பெண்ணை ஒரு கழுதைக்குக்கட்டிக் கொடுப்பதா என்று கேட்கிறேன். இவ்விதமாக ஆண்களுடைய வடிகட்டின முட்டாள் தனத்திற்குப் பெண்களைக் கருவியாக உபயோகப்படுத்தும் நமது நாட்டைப்பற்றி மிஸ் மேயோ [Miss Mayo] புஸ்தகம் எழுதினதில் பிழையென்ன என்று கேட்கிறேன். மிஸ். மேயோவைமட்டும் நான் இப்போது சந்திப்பேனேயாகில் இந்த ஜில்லாவுக்கழைத்துவந்து

நம்முடைய செடில் காவடிகளையும், நாற்றம் பிடித்த குளத்தில் 4 லட்சம் பேர் குளிக்கும் கும்பகோணம் மகாமகக்காட்சியையும், பூக்கட்டி வைத்துப்பார்த்து கல்யாணம் செய்வதையும், குழவிக்கல்லின் தலையில் பாலைக்கொட்டி சாக்கடைத் தண்ணீரோடு சேர்த்து நமது மக்கள் குடிப்பதையும், நமது பி. ஏ., க்களும், பி. ஏ., பி. எல்., களும், எம். ஏ., எல். டி., களும் சூரிய, சந்திர கிரகணங்களின் போது தங்கள் தீட்டை ஒழிப்பதற்காக தண்ணீரில் முழுகுவதையும் இன்னும் இதுபோன்ற மூடத்தனமான, ஆபாசமான, அநாகரீகமான கொடுமையான விஷயங்களையெல்லாம் காட்டி "இந்திய மாதா" வின் இரண்டாம் பாகம் [Mother India—Part II] எழுதுவதற்கு ஏற்பாடு செய்வேன். அந்த அம்மாள் நம்மீது காறித் துப்பிக்கூட சாரதா சட்டத்தையும் மீறி 9 வயதிலும் 12 வயதிலும் சிறு பெண்களைப் பிடித்து பலவந்தமாகக் கல்யாணம் செய்து வைக்கும் கொடிய பாதகர்களுக்குப்புத்தி வரவில்லையென்றால், இவர்களுடைய மதக்கொழுப்பையும் ஜாதி ஆணவத்தையும் என்னென்று சொல்வது?

எனவே நமது இயக்கமானது விதவா மணம், கலப்பு மணம், காதல் மணம் முதலிய துறைகளில் இன்னும் தீவிரமான பிரசாரம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். "நீண்ட நாள் பழக்கம்; முன்னோர்கள் செய்தது" என்ற காரணத்தால் எவ்வளவு பெரிய விஷயமானாலும் அது நமது அறிவுக்குப் பொருந்தாவிட்டால் அதை உடனே விட்டொழிக்கவேண்டியதே நமது கடமையாகும். இவ்விஷயத்தில் வாலிபர்கள்தான் தைரியமாக ஒரு சமூகப் புரட்சி [Social Revolution] செய்ய வேண்டும். ஆகையால் இளைஞர்களாகிய ஆண்களும், பெண்களும் நமது இயக்கத்தை கிராமந்தோறும் பரப்பி, கூடிய சீக்கிரத்தில் சுயமரியாதை இயக்கம் இந்தியா முழுதும் பரவி நமது மக்களுக்கு கல்வி, நாகரீகம், ஒற்றுமை, சமத்துவம் முதலிய துறைகளில் பயன்படவேண்டுமாய்ச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோழர்களே, நீங்களெல்லோரும் இதுவரையில் அமைதியாக இருந்து கேட்டதற்காக மருமுறையும் தங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் எனது சொற்பொழிவை முடித்துக்கொள்ளுகிறேன்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

ஷை சங்க கவுன்ஸில் மீட்டிங்கு 1932-ஞு ஜூன்மீ 27உ திங்கட்கிழமை மாலை 5-மணிமுதல் சங்கம் ஆபீஸில்நடைபெறும். அதுசமயம் பலவிஷயங்கள் ஆலோசிக்கப்படும் ஜனகாரியதரிசி எழுதுகிறார்.

## புதுவை வாலிபர் மகாநாடு.

புதுவை, கேப்ளே தியேட்டரில் 16—6—32உ திருமதி. இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் புதுவை முதலாவது வாலிபர் மகாநாடு கூடிற்று. பிரதிநிதிகள் உட்பட சுமார் 1000 பேர்கள் விஜயம் செய்திருந்தனர்.

டாக்டர். நடேசமுதலியார் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்து வாலிப இயக்கத்தின் அவசியத்தையும், அவர்கள் செய்யவேண்டிய பணியையும் பற்றிப்பேசியபின்னர் வரவேற்புக்கழகத்தலைவர் பிரஞ்ச் இந்திய அமைச்சர் திரு. ஏ. வி. முத்தையா அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று, வாலிபர் இயக்கத்தின் அவசியத்தையும், அவர்கள் எதிர் காலத்தில் செய்யவேண்டிய வேலையையும்பற்றிச் சுருக்கமாகப்பேசினார். அதன் பின்னர் தலைவர்சொற்பொழிவாற்றினார். (பிறிதோரிடம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.) இடைவேளை போஜனத்திற்காகமகாநாடுகலைந்துகூடியபோது திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் "வாலிபர்களும் கிராமப்புனருத்தாரணமும்" என்பது பற்றிப்பேசினார்.

(நமது நிருபர்)

## ஓர் வேண்டுகோள்.

கும்பகோணம் தாலூககாவிற்குள் எவ்விடத்திலாவது சாரதா சட்டத்தை மீறி விவாகம் நடைபெற்றால் அத்தம்பதிகளின் பெற்றோர்கள், போஷகர்கள் ஷை விவாகத்தை நடத்திவைத்த புரோகிதர்கள் மணமக்கள் முதலியோர்களின்மீது கிரிமினல் நடவடிக்கை நடத்துவதாக ஏற்கனவே கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் தீர்மானமாகி அதன் விவரத்தை துண்டுப் பிரசுரமூலமாக அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாசம் வரையில் விசேஷமாக விவாக முதலானவைகள் நடைபெறக்கூடிய காலமானபடியால் எங்கேனும் சாரதா சட்டத்தை மீறி ஆண்களுக்கு 18 வயதிற்குள்ளும் பெண்களுக்கு 14 வயதிற்குள்ளும் விவாகம் செய்யப்பட்டால் சீர்திருத்த நோக்கமுள்ளவர்கள் ஷை சட்டவிரோதமான கலியாணத்தின் விபரத்தை ஷை கலியாண தம்பதிகளின் தாய்தந்தையர் அல்லது போஷகர்கள் ஷை விவாகத்தை நடத்திவைத்த புரோகிதர்கள் முதலியவர்களின் பெயர் முதலியவற்றை விசாரித்து சரியான தகவல் கொடுத்தால் கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் சார்பாக ஜாமீன் கொடுத்து கிரிமினல் நடவடிக்கை நடக்கத் தயாராகயிருக்கிறோம் என்பதை இதன்மூலம் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## அறிவிப்பு.

கும்பகோணம் கீழக்கடலங்குடித்தெருவிலிருந்து வந்த ஷை சங்கக் கட்டிடத்தைக்காலி செய்துவிட்டு தற்காலம் கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டிலிருக்கும் செண்பகவிலாஸ் தோட்டத்திலுள்ள பங்களாவிற்கு ஷை சங்க ஆபீசை மாற்றப்பட்டிருக்கிற விபரம் ஷை சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும் மற்றுமுள்ள அபிமானிகளுக்கும் வெளியூர் அன்பர்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஷை சங்கத்திற்கு கடிதம் துண்டுப்பிரசாரம் முதலியவைகள் அனுப்பி வரும் சகோதர சகோதரிகள் இது முதல் இதனடியில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விலாசம்:—

சுயமரியாதை வாலிபர் சங்கம்
செண்பகவிலாஸ் தோட்டம் பங்களா
ரயில்வே ஸ்டேஷன் ரோடு
கும்பகோணம்.

## கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கம்.

1932-ம் வருடம் ஜூன் மாதம் 16-ம் தேதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு, கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷன் ரோடு "செண்பக விலாஸ்" தோட்டத்திலுள்ள சங்கம் ஆபீஸ் கட்டிடத்தில் சங்கத் தலைவர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் மேற்படி சங்கத்தின் ஜெனரல் பாடி மீட்டிங்கு நடைபெற்றது. அனேக அங்கத்தினர்களும், சுயமரியாதை இயக்க அபிமானிகளிற் பலரும் விஜயம் செய்திருந்தனர். சங்கத்தின் அபிவிர்த்தியைக் குறித்து அனேகவிஷயங்கள் யோஜித்து முடிவு செய்யப்பட்ட பிறகு நாளது ஜூன் மாதன் 18, 19 தேதிகளில் மன்னார் குடியில் நடைபெறப் போகும் சுயமரியாதை மகாநாட்டிற்கு இச்சங்கத்தி லிருக்கும் அங்கத்தினர்களில் சுமார் 20 பெயர்கள் டெலிகேட்டாக போய் வருவதென்று தீர்மானித்து இரவு 8 மணிக்கு மீட்டிங்கு இனிது கலைந்தது.

## தோழர். அ. பொன்னம்பலம்.

தோழர்கள் அ. பொன்னம்பலம் ராம. சின்னையா, நா. நமச்சிவாயம், கல்யாணி திருமதிகள் பொன்னழகு அம்மையார், தனலட்சுமி அம்மையார் முதலியவர்கள் 14—6—32ல் காரைக்குடியிலிருந்து பயணமாகி திருச்சி ஸ்ரீரங்கம், மன்னார்குடி, நீடாமங்கலம், தஞ்சாவூர், திருக்காட்டுப்பள்ளி முதலிய இடங்கட்குச்சென்றுவிட்டு 22—6—32 இரவு காரைக்குடிவந்து சேர்ந்தார்கள்.

## கரூர் வண்ணார் நாவிதர் 2 வதுசமூதாயக்கூட்டம்.

21-6-32 தேதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கரூர் மாவடியான் கோவிலுக்கு முன்புறம் தோப்பில் வண்ணார்—நாவிதர் 2 வதுசமூதாயக் கூட்டம் கூடிற்று. இருசமூகத்தையும் சார்ந்த பிரதிநிதிகள் 150 பேர்களும் பிரபல சுயமரியாதைப்பிரசாரகர்களும் கூட்டத்திற்கு விஜயம்செய்திருந்தார்கள். கூட்டத்திற்கு திராவிட ஊழியர் உயர்திருவாளர் டி. ஆர் தலம்பநாதம் பிள்ளை. அவர்கள் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டு முன்னுரையாகக்காலச்சக்கரத்தின் மாறுபாட்டை அனுசரித்து மூடப்பழக்க வழக்கங்களை அறவேயொழித்து முயற்சியால் வெற்றிபெற வேண்டும் என்றும், தற்காலம்கரூரில் செங்குந்தர்கள்என்பவர் இந்த குலத்தினர்களுக்கு சுபகாரியங்களில் மேளம்வாசிக்க மறுத்ததற்காக எல்லோரும் அவர்களுக்கு தொழில்மறுப்புச்செய்ததை பாராட்டுவதாகவும் தொழிலாளர்களுக்குள் ஏற்றத்தாழ்வைப்புகுத்தி வேற்றுமைப் படுத்துவது அறிவுடமையாகாது என்றும், எத்தகைய கஷ்டம் நேரிட்டாலும் சுயமரியாதையை இழக்காமல் காரியங்கள்கைகூடு மட்டும் வேலை நிறுத்தம்செய்தலே—நலமென்றுபல கோட்பாடுகளுடன் நீண்டநேரம்பேசினார். பின்னர் முறையே திருவாளர்களான—கே. ஏ. பசுபதிமுதலியார், டாக்டர் கே. எம். தர்மலிங்க பண்டிதர். கே. எம். சின்னசாமிமேஸ்திரி, டாக்டர் வி. எஸ். நடேசபண்டிதர். டி. எஸ். பெரியண்ணபண்டிதர், கே. எம். ராஜூமேஸ்திரி. சின்னுமேஸ்திரி முதலாயினோர் தொழிலாளர்களின் ஒற்றுமையைப்பற்றியும் மேல்நாடுகளில் தொழிலாளார்கள் ஒற்றுமையாய் நடந்து வெற்றிபெற்று வரும் விதத்தையும் விபரமாக எடுத்துக்கூறி சங்கம் ஏற்படுத்துவதற்காகவும் அதன்எதிர்காலச்செலவுகளுக்காகவும் ரூ 29—10—0 கூட்டத்தில்வசூலிக்கப்பட்டு தலைவர்வசம் ஒப்புவிக்கப்பட்டது. சுயமரியாதைத் தொண்டர்திரு செங்கோட்டயமுதலியாரால் சுயமரியாதை சமத்துவப்பாடல்கள் பாடப்பட்டன. தலைவருக்கும் திரு. கே. ஏ. பசுபதிமுதலியாருக்கும் ரோஜாமலர் மாலைகள் சூட்டப்பெற்றன. பின்னர் தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் பகல் 1 மணிக்குகலைவுற்றதுஎன ஒருநிருபர் எழுதுகிறார்.

## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

Read the

**"SUPERSTITION OF KHADI"**

A Discussion

By

S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.



## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.



## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஆண்டு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0.    வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



### "சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—8—0.

ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.



### சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.எ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



### "செவிடு"

மற்றெல்லாவித காது ரோய்களையும் குணப்படுத்துவது "கரமத்எண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.



### உங்கள் கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St.    Calcutta.



ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*



மதனகாமேஸ்வர லேகியம் (*Regd*)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனம். (ரிஜிஸ்டர்)

சித்தஔஷதசாலை
கம்பெனி K. A.
போஸ்டு முல்லச்சேரி,
தென்மலையாளம்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்விகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சாத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.